Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 141 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை
(05.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 12, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.60

உள்ளூராட்சித் தேர்தலுக்கான

## வேட்புமனு ஜன.18 முதல்

### தபால்மூல வாக்களிப்புக்கு இன்று தொடக்கம் விண்ணப்பிக்கலாம்

*நா. தினுஷா*

நாட்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

உள்ளூராட்சித் தேர்தல் நடந்தா அது கிட்டத்தட்ட பார்லிமெண்ட் எலெக்சன் போலத்தான் இருக்கும் பாருங்கோ...



## சம்பந்தனைச் சந்தித்தார் மஹிந்த





02 பக்கம்

# ஆணைக்குழுவுக்குள் கருத்து முரண்பாடா?

### தேர்தல் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறத் தயாராகிறது அரசு

*நமது விசேட செய்தியாளர்*

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அண்மித்துள்ள நிலையில் தேசிய தேர்தல் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி வெளியிடப்படவுள்ள வேளையில், தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்குள்... 02 பக்கம்

## நட்டமடைந்த நிறுவனங்களில் போனஸ் வழங்கப்பட்ட விவகாரம்

### விசேட விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு

02 பக்கம்

## லிட்ரோ எரிவாயு விலை இன்று குறையும்

02 பக்கம்

## அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணம் குறைப்பு

### காலி - கதிர்காமம் - கொழும்பு வீதியில் ‘அரைசொகுசு’ இனி கிடையாது

*நா. தினுஷா*

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களுக்கான பயணிகள் கட்டணம் நேற்று (04) நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், 02 பக்கம்

## பால் உற்பத்தி மேம்பாட்டுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு

பால் மற்றும் பால் உற்பத்திகளில் இலங்கையை தன்னிறைவு அடையச்செய்வதற்கு இந்திய அரசாங்கம் உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## ஐ.நா. பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் திருமதி கன்னி விக்னராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு நேற்று (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது.

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு... 02 பக்கம்

## தினேஷ் கொலை விவகாரம் நீதவான் அறைக்குள் சாட்சியாளர்கள் விசாரணை

*கே. சுபானி*

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணை சாட்சியாளர்கள் நீதிமன்றம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாது நீதவானின் உத்தியோகபூர்வ அலுவலகத்துக்குள் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்திரா ஜயசூரியவின் அதிகாரப்பூர்வ அலுவலகத்துக்கு நேற்றுப் பகல் 12.30 மணியளவில் மேற்படி சாட்சியாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்த நிலையில்... 02 பக்கம்

## புறக்கோட்டையில் மீட்கப்பட்ட மருந்துகள்

### சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டதாக தகவல்

*கே.சுபானி*

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒருகோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான மருந்துப்பொருட்கள், புறக்கோட்டையிலுள்ள பிரதான மருந்தகக் களஞ்சியசாலையிலிருந்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. 02 பக்கம்

## கறுப்புச் சந்தையில் விமானப் பயணச்சீட்டு

### அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்

*கே. சுபானி*

நாடளாவிய ரீதியில் அனுமதிப்பத்திரமின்றி விமானப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்யும் குழு தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுதொடர்பில் பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை சிவில்.... 02 பக்கம்

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 64 பேருக்கு இடமாற்ற உத்தரவு

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் எழுவர் மற்றும் ஐந்து பிரதி பொலிஸ் மா அதிபர்கள் உட்பட மொத்தம் 64 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 19 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர்களாக உடனடியாக அமுலுக்கு வரும்வகையில், பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் (NPC) அனுமதியின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவை நிர்வாகத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்க... 02 பக்கம்



## அரசு அச்சிடும் பணத்தை தேர்தலுக்கு செலவழிக்குக!

### கம்மன்பில கோரிக்கை

*கே. சுபானி*

“அரசாங்கம் மூன்று நாட்களுக்குள் அச்சிடப்படும் பணத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பெற்றுகொடுத்தால் தேர்தலை நடத்தலாம்” - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில நேற்று (04) தெரிவித்தார். 02 பக்கம்

## பேச்சு தோல்வியானால் தனித்துப் போட்டி

### விமல் எம்.பி. கருத்து

*நா. தினுஷா*

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திர மக்கள் சபை என்பன எங்களின் பொறிமுறைகளை ஏற்றுக்கொண்டால் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவோம் என்றும் அவ்வாறில்லாவிட்டால் உத்தர லங்கா சபா என்ற அடிப்படையில் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் உத்தர லங்கா சபாவின் தலைவருமான விமல் வீரவங்ச தெரிவித்தார். 02 பக்கம்



## தலதா மாளிகை நிர்மாணமென உலாவிவரும் கட்டுக்கதைகள்

### மகாநாயக்க தேரர்கள் எச்சரிக்கை

போலி தலதா மாளிகையொன்றை உருவாக்கி அதனை நிர்மாணித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாசங்கத்தினர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இதற்காக தேசிய மற்றும் சர்வதேசத்திலுள்ளவர்களிடம் கட்டுக்கதைகளை முன்வைத்து பணம் மற்றும் தங்கம் என்பவற்றை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கண்டி உபோசித புஸ்பாராம விகாராதிபதி திப்பட்டுவாவ ஸ்ரீ சித்தார்ம சுமங்கலதஹிதான தேரர் மற்றும் ஹயகிரி விஜயசுந்தராராம விகாராதிபதி வரகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த தேரர்... 02 பக்கம்

# சாரதிகளை சோதனையிட பொலிஸாருக்கு புதிய கருவி



**கே.சுபானி**

நாட்டில் வீதி விபத்துகளைக் குறைப்பதற்காக போக்குவரத்து பொலிஸாருக்கு விசேட கருவியொன்று வழங்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை துல்லியமாக அடையாளம் காணும் வகையில் குறித்த கருவி வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் கடந்த ஆண்டு அதிகளவிலான வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை மதுபோதையில் வாகனம் செலுத்தியதால் இடம்பெற்றவை.

ஆகவே, இதுபோன்ற காரணங்களால் ஏற்படும் வீதி விபத்துகளை குறைப்பதற்காக மேற்படி மின்னணு கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## சம்பந்தனைச்...

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

சம்பந்தனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நிலைவரம் உட்பட்ட பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டன.

எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஜனாதிபதி ரணிலின் முயற்சிகளுக்கு ஆதரவு தருமாறு இதன்போது சம்பந்தன் மஹிந்தவிடம் கோரியதாகவும், மஹிந்த அதற்கு சாதகமான பதிலை வழங்கியதாகவும் தெரியவருகிறது.

## தலதா மாளிகை...

ஆகியோர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருநாகல, வதாகட வீதி, பொதுஹெர என்ற முகவரியில் ஜானக்க சேனாதிபதி என்பவர் போலி தலதா மாளிகையொன்றை நிர்மாணித்து வருகிறார் என்பது தொடர்பில் எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. தற்போது வரையில், தேசிய மற்றும் சர்வதேசத்திலுள்ள பெரும்பாலானோர் இந்தக் கட்டுக்கதைக்கு ஏமாற்றமடைந்து பணம் மற்றும் தங்க நகைகள் என்பவற்றை பரிசளித்துள்ளதாக தெரியவருகிறது .

அதேபோன்று பௌத்த மக்களின் மனதை நோகடிக்கும் வகையில் சேபால அமரசிங்க என்பவரால், புத்த தர்மம் மற்றும் ஸ்ரீ தலதா மாளிகைக்கு அவதூறு இழைக்கும் வகையிலான கருத்தை சமூக ஊடகங்களில் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இவ்வாறு புத்த தர்மத்துக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் தலதா மாளிகையின் வரலாற்றை திரிபுபடுத்தும் வகையில் போலி தலதா மாளிகையை உருவாக்கி கற்பனையினூடாக முன்னிலைப்படுத்துதல், புத்த தர்மத்துக்கு எதிராக அவதூறான கருத்துகளை முன்வைத்தல், ஒட்டுமொத்த உலகவாழ் பௌத்த மக்கள் மற்றும் பக்தர்களின் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படும் ஸ்ரீ தலதா மாளிகையின் புனிதத்துக்கு பங்கம் இழைக்கும் செயற்பாடு என்றும் புத்த தர்மத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் என்பதும் அனைவரும் அறிநத விடயமாகும். இவ்வாறு பௌத்தத்தை ஏற்காத கட்டுக்கதைகளை புனைபவர்களினால் முன்னெடுக்கப்படும் பௌத்த விரோத செயற்பாடுகள் தொடர்பில், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பௌத்தத்தை பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேச்சு தோல்வியானால்...

கூட்டணி அமைப்பது தொடர்பிலான உத்தர லங்கா சபாவின் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம். இதுவரையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திர மக்கள் சபை ஆகிய இரண்டு கட்சிகளுடனும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் அந்த தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

உத்தர லங்கா சபா உள்ளிட்ட இந்த மூன்று அணியினரும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதானால், அதற்கான பொறிமுறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். அதுதொடர்பில் அவர்கள் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறார்கள். விரைவில் அவர்களின் பதில் எங்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அவ்வாறு இல்லாவிட்டால் உத்தர லங்கா சபை என்ற அடிப்படையில் இந்த தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

தனிப்பட்ட ரீதியில் பல்வேறு தரப்பினரிடம் கலந்துரையாடல் நடத்தியிருக்கிறோம். புதிய கூட்டணி உருவாக்கப்படுமா அல்லது உத்தர லங்கா சபை என்ற அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவதா என்ற தீர்மானம் எடுக்கப்படும் வரை அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டத்தின் அடிப்படையில் நோக்கும்போது, நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்பதற்காக தேர்தலை காலந்தாழ்த்த முடியாது. ஆனால், தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு அரசாங்கம் வேறேதும் சூழ்ச்சிகளை செய்கிறதா என்றால் இல்லை என்று எங்களால் குறிப்பிட முடியாது. எது எவ்வாறானும், தேர்தலில் வெற்றிகரமாக போட்டியிட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## தினேஷ் கொலை...

மூடிய அறைக்குள் விசாரணைகள் ஆரம்பமாகியிருந்தன.

மரண விசாரணைக்கான சாட்சியமளிப்பதற்காக தினேஷ் ஷாப்டரின் மனைவி, தினேஷ் ஷாப்டரின் நிறுவன பணிப்பாளர் திரிஷ் பெரேரா மற்றும் பொரளை பொதுமயான ஊழியர்கள் இருவர் நீதிமன்றத்துக்கு வருகைத்தந்திருந்தனர்.

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இதுவரை 140 பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மனித கொலைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, தினேஷ் ஷாப்டரின் மரணம் பதிவாகிய இடத்தில் காணப்பட்ட இரத்த மாதிரிகள் உள்ளிட்ட ஆதாரங்களை மரபணு பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்ப கொழும்பு நீதவான் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

அதனடிப்படையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு இணங்க தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரி, நகங்கள் உள்ளிட்ட உடற்கூறுகள் மற்றும் சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் தொடர்பில் மரபணு பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நட்டமடைந்த...

நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் இரண்டு நிறுவனங்களில், பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த நிறுவனங்களிடம் இருந்து அறிக்கையை கோரியுள்ளார்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகிய நிறுவனங்களிடம் இருந்தே ஜனாதிபதி அறிக்கையை கோரியுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

2022 மற்றும் 2023ஆம் நிதியாண்டின் அரையாண்டு காலப்பகுதியில், ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தில் 112.8 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் 170.4 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதோடு, 284.5 பில்லியன் ரூபா செலவினம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம், இலங்கை கனியவள கூட்டுத்தாபனம், கடந்த வருடம் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மாத்திரம் 549 பில்லியன் ரூபா நட்டமடைந்ததாக தகவல்கள் வெளியாகிருந்தன.

கனியவளக் கூட்டுத்தாபனம், இரண்டு மாதங்களுக்கான வேதனத்தை அதன் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது.

அதேநேரம், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், அதன் ஒவ்வொரு பணியாளருக்கும், மேலதிக கொடுப்பனவாக, ஒரு இலட்சம் ரூபா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனியவளக் கூட்டுத்தாபனத்தில், 4 ஆயிரத்து 200 ஊழியர்கள் உள்ள நிலையில், உயரதிகாரிகள் மத்தியில், 5 இலட்சம் ரூபா வேதனம் பெறும் அதிகாரிகளும் உள்ளனர். அவர்களில் சில அதிகாரிகளுக்கு, 10 இலட்சம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையில், 5 ஆயிரத்து 800 ஊழியர்கள் உள்ள நிலையில், அவர்களுக்கு 13ஆவது மாதம் எனக் குறிப்பிட்டு, ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.நா. பிரதிநிதிகள்...

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டிய உதவிப் பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் முன்னேறுவதற்கும் நாட்டின் எதிர்காலப் பயணத்தை உறுதி செய்வதற்கும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உதவிப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழு ஏற்றுக்கொண்டது.

நாடாளுமன்ற அரசியலமைப்பு சபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட நாட்டின் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தும் கலந்துரையாடல் என்பன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதிநிதிக் குழுவுக்கு விளக்கமளித்ததுடன், தூதுக்குழு அந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமது பாராட்டுகளை தெரிவித்தது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே, உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## லிட்ரோ எரிவாயு...

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 250 ரூபாவால் இன்று குறைக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 5 கிலோகிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளும் இன்று குறைக்கப்படவுள்ளன.

லிட்ரோ எரிவாயுவின் விலைக் குறைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## பால் உற்பத்தி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையில் நேற்று இன்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் பால் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை, இந்தியாவின் தேசிய பால் மேம்பாட்டு சபை மற்றும் அமுல் பால் நிறுவனம் ஆகியன இணைந்து வழங்கவுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவில் தங்கியிருப்பதற்குப் பதிலாக உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க குறுகிய, நடுத்தர, நீண்ட கால வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்காக இந்திய தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து பணியாற்றுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை அண்மையில் நியமித்தார்.

அந்தக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் இந்திய தேசிய பால் மேம்பாட்டு சபையின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர். இவ்வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்றம் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்திய பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான முதல் செயலாளர் கலாநிதி ராகேஷ் பாண்டே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## கறுப்புச் சந்தையில்...

விமான சேவைகள் அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி விமானப் பயணச்சீட்டுகள் விற்பனை செய்யப்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என மேற்படி அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறான முகவர் நிலையங்களில் விமானப் பயணச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதை தவிர்க்குமாறும், இவ்வாறான சட்டவிரோத முகவர் நிலையங்கள் தொடர்பில் அறிவிக்குமாறும் பொதுமக்களிடம் அதிகார சபை கோரியுள்ளது.

மேற்குறித்தான முகவர் நிலையங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை உறுதிப்படுத்தும் ஆதாரங்களின்றி விமானப்பயணச் சீட்டுக்களை விநியோகிக்கும் எந்தவொரு முகவர் நிறுவனத்துடனும் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வேண்டாம் என அதிகார சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## புறக்கோட்டையில்...

மேற்படி மருந்துகள் துருக்கி, இத்தாலி, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மிகவும் சூட்சுமமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள மருந்துகளில் புற்றுநோய் ஒழிப்பு, சர்க்கரைநோய், உயர் இரத்த அழுத்தம், ஆண்மைக் குறைபாடு, கண் கோளாறுகள், மலட்டுத்தன்மை, இதயநோய் மற்றும் மூளை கோளாறுகளுக்குப் பயன்படுத்தும் விலையுயர்ந்த மருந்துகள் இருப்பதாக அதிகாரசபையின் பிரதான உணவு மற்றும் மருந்து பரிசோதகர் அமித் பெரேரா தெரிவித்தார்.

புறக்கோட்டையிலிருந்து புத்தளம், கண்டி, கல்முனை, மட்டக்களப்பு உள்ளிட்ட பிரதேசங்களுக்கு மேற்படி மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், வேறு நாடுகளில் விற்பனை செய்வதற்காக அந்த நாடுகளின் மொழிகளில் விளக்கமளிக்கப்பட்ட மேற்குறித்த மருந்து தொகை எவ்வாறு சந்தைக்கு கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமித் பெரேரா தெரிவித்தார்.

மேற்படி மருந்துகள் விமான தபால்சேவையினூடாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாகவும், இதுதொடர்பாக இலங்கை தபால் திணைக்களத்திடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்த மருந்துகள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்த விநியோகஸ்தர்கள் மூவர் குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதுதொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதுதவிர மேற்படி மருந்தகக் களஞ்சியத்திலிருந்து வைத்தியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் ஏராளமான மருத்துவ உபகரண மாதிரிப் பொருட்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## அரசு அச்சிடும்...

இந்நிலையில் தேர்தலை தடுத்து நிறுத்துமாறு உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ரிட் மனுதொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டாம். அதனை ஒத்திவைக்குமாறு வலியுறுத்தி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதியாக நிதியமைச்சின் செயலாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பிலான வழக்கொன்றில் நிதியமைச்சின் செயலாளர் எவ்வாறு பிரதிவாதியாக முடியும் ?

இந்த மனுவின் பிரகாரம் அடுத்து என்ன நடக்குமென்றால், நீதிமன்றத்தில் முன்னிலையாகும் நிதியமைச்சின் செயலாளர், எங்களுக்கு தேர்தலை நடுத்துவதற்கா பணமில்லை. அதனால், தேர்தலை நடத்த முடியாது என தெரிவிப்பார். இந்த நாடகம் அசாத்தியமானது. ஏனென்றால், அரசுக்கு தேர்தலை நடத்துவதற்கான பணம் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவிக்க முடியாது. அதாவது மூன்று நாட்களுக்குள் அச்சிடப்படும் பணத்தை அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பெற்றுக்கொடுத்தால் இந்த தேர்தலை நடத்த முடியும் என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான...

இடம்பெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதற்கமைய, 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகம் மற்றும் அரசாங்க அதிபர் காரியாலயங்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்யமுடியும் என்றும் ஆணைக்குழு நேற்று (04) அறிவித்தது.

மேலும், தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதுடன், 06 மற்றும் 08ஆம் திகதிகளில் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறாது என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் இடம்பெறவுள்ள, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பிரதேசம் தவிர்ந்த 340 உள்ளூராட்சி மன்றங்களில் 29 மாநகர சபைகளும், 36 நகர சபைகளும் 275 மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள் மற்றும் பிரதி தவிசாளர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வேட்புமனுத் தாக்கல் தொடர்பான அறிவித்தல்கள் நேற்று சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 340 உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலில் தபால் மூல வாக்கெடுப்புக்கு தகுதிபெற்றுள்ளவர்கள் இன்று முதல் (05) எதிர்வரும் 23ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ஆணைக்குழுவுக்குள்...

ஏற்பட்டுள்ள பிளவைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பிளவின்படி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவுக்கு ஆதரவாக சிறுபான்மையான குழுவொன்றே இருப்பதால் தேர்தல் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உடனடியாக சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஒரு பகுதியினர் தேர்தலை நடத்த வேண்டும் என அறிவித்துள்ள நிலையில், மற்றொரு பிரிவினர் நிதிப்பற்றாக்குறையால் தேர்தலை நடத்தக்கூடாது என அறிவித்தமையே கடும் உட்கட்சி பிளவுக்கு முக்கிய காரணம் என தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவில் தெளிவாக இரண்டு குழுக்கள் உள்ளன என்ற இந்த நிலைமையின்கீழ் வேட்புமனுக்கள் கோரப்பட்டாலும் தேர்தலை நடத்துவதில் பல சிக்கல்கள் ஏற்படலாம் என அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கு 12 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை தேவைப்பட்டாலும் 10 பில்லியன் ரூபா நிதியே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதால் முழுத் தொகையையும் எடுக்காமல் தேர்தல் செலவுகளை நிர்வகிக்க முடியாது என்பது பெரும்பான்மையானோரின் கருத்தென தெரிகிறது.

பணிக்கு வரும் அரசு ஊழியர்களுக்கு எரிபொருள், உணவு போன்றவற்றுக்கு கட்டணம் செலுத்துவதற்கு திறைசேரியில் இருந்து நிதி வரவில்லையென்றால், பல நிர்வாக சிக்கல்கள் ஏற்படும் என தேர்தல் ஆணைகுழுவில் உள்ள ஒரு தரப்பு கருத்து தெரிவித்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் தேர்தல் ஆணைக்குழுவுக்குள் கருத்து முரண்பாடென்று சித்தரித்து சட்ட மா அதிபர் ஊடாக நாடாளுமன்ற உதவியுடன் தேர்தலை பிற்போட அரசாங்கம் தயாராவதாக எதிர்க்கட்சி தரப்புகள் சொல்கின்றன.

## அதிவேக நெடுஞ்சாலை...

மேலும், காலி வீதி கதிர்காமம் முதல் கொழும்பு வரையில் பயணிக்கும் அரைசொகுசு பஸ்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, கதிர்காமம் முதல் கொழும்பு வரையில் இனிமேல் சாதாரண பஸ் சேவையே இடம்பெறும் என்பதுடன், நேற்று (04) நள்ளிரவு முதல் கதிர்காமம் முதல் கொழும்புக்கான பஸ் கட்டணம் 1117 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் வளிக்கமளிக்கும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்தப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து வாகனங்களுக்கான கட்டணங்கள், உற்பத்தி செலவுகள் என அனைத்தும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கையும், பயணிகளின் எண்ணிக்கையும் 50 சதவீதத்துக்கும் அதிகமாக வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

கதிர்காமம், மாத்தறை மற்றும் காலி ஆகிய பிரதேசங்களை மையமாக கொண்டு கொட்டாவ, கடுவலை, கடவத்தை, கொழும்பு வரையில் இருக்கும் அதிவேக நெடுஞ்சாலைகளில் 250 பஸ்களில் சேவையில் ஈடுபடுகின்றன. இவற்றில் அதிகமானவை தனியார் துறையினருக்கு சொந்தமான பஸ்களாகும். இந்த பஸ் உரிமையாளர்கள் பல்வேறு செலவுகளின் மத்தியிலேயே சேவையை வழங்குகிறார்கள். இதனை நிர்வாகிக்கும் அதிகாரம் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவே அதற்கான தீர்மானங்களை எடுக்கும். அவர்களின் தீர்மானத்துக்கு அனுமதியை பெற்றுக்கொடுக்கவே நான் நடவடிக்கை எடுக்கிறேன். எனவே, கட்டண குறைப்பு தீர்மானங்களை என்னால் நேரடியாக மேற்கொள்ள முடியாது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் எங்களை சந்தித்து தொடர்ச்சியாக கலந்துரையாடியிருந்தார்கள். இதன்போது, மாத்தறை முதல் கொட்டாவ வரையில் பயணிக்கும் 140 பஸ்களுக்கு அனுமதிப் பத்திரம் இருந்தாலும், நாளொன்றுக்கு அவற்றில் 60 – 70 வரையான பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. காலி முதல் கொட்டாவ வரையில் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க அனுமதிபெற்ற 28 பஸ்கள் இருக்கின்றன. ஆனால், நாளாந்தம் 15 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. மேலும், போக்குவரத்து சபைக்கு சொந்தமான நான்கு பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

பஸ் கட்டண அதிகரிப்பினால், பயணிகளின் வருகை வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மேலும், 30 – 40 பஸ்களே சேவையில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் ஏனைய செலவுகள், சாரதிகள், நடத்துநர்கள் இந்தத் துறையிலிருந்து நீங்கிச்செல்லுதல், குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொண்டுள்ளமை போன்ற காரணங்களால் தாம் நெருக்கடி நிலைமைக்குள்ளாகியுள்ளதாகவும், இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் இந்த சேவையிலிருந்து விலகுவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் அறிவித்திருக்கிறார்கள்.

அதற்கமைய, இதுதொடர்பில் ஆணைக் குழுவுடன் கலந்துரையாடி அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றக்கொடுக்க தீர்மானித்துள்ளோம். அதிவேக நெஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களுக்காக தொழில்நுட்ப கட்டணம் அறிவிடப்படுகிறது. இதற்கு முன்னர் ஒரு வருடத்துக்கு 12 இலட்சத்து 96 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது. எரிபொருள் விலை மற்றும் கட்டண அதிகரிப்பின் காரணமாக இந்த கட்டண அறவீட்டு 33 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இதனாலும், அவர்கள் பிரச்சினைக்குள்ளாகியுள்ளார்கள். எனவே, இந்த தொழில்நுட்ப கட்டணத்தில் அரசாங்கமும் பங்கெடுக்க தீர்மானித்துள்ளது.

மேலும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ்களின் கட்டணம் நேற்று (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும்வகையில் 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, நேற்று நாள்ளிரவு முதல் காலி வீதி கதிர்காமம் முதல் கொழும்பு வரையில் பயணிக்கும் அரைசொகுசு பஸ்கள் நீக்கப்படுகின்றன. சாதாரண பஸ்களே இயங்குகின்றன. அதற்கமைய, இந்த வீதியில் பயணிக்கும் பஸ்கட்டணம் 1541 ரூபாவிலிருந்து 1117 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த வீதியில் 28 பஸ்கள் சேவையில் ஈடுபடும். ஏனைய பஸ் கட்டணங்கள் குறித்து கலந்துரையாடிதன் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றார்.

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள்...

பொதுச் சேவைகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன சப்ரகமுவ மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.சி.மெதவத்த தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தில் இருந்து துணை சேவைகளுக்கான பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத் கிழக்கு மாகாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.டி.ஆர்.எஸ்.தமிந்த வடமத்திய மாகாணத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சப்ரகமுவ மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கடமைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், குற்றப்பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் பி.லியனகே இடமாற்றம் செய்யப்பட்டு பொலிஸ் போதைப்பொருள் பணியகத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, போதைப்பொருள் பணியகத்திலிருந்து பிரதி பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.யூ.பி.ஜெயசிங்க நுவரெலியா வலயத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, 23 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், 8 பொலிஸ் அத்தியட்சகர்கள், இரண்டு பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளடங்கலாக 21 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஆறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரதி பொலிஸ்மா அதிபர்களாகவும், 13 பொலிஸ் அத்தியட்சகர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

# ரயில்வே வெற்றிடங்கள் ஆட்சேர்ப்பிற்கு அனுமதி

ரயில்வே திணைக்களத்தின் பல்வேறு தரங்களுக்கும் விரைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

அதன்படி, 100 ரயில் சாரதிகள், கட்டுப் பாட்டாளர்கள் மற்றும் நிலைய பொறுப் பதிகாரிகள் ஆகியோர் இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாக திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக 3,000 கனிஷ்ட ஊழியர்களும் உடனடியாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து இவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பெருமளவிலான ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் காரணமாக கடந்த சில நாட்களாக பல்வேறு ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

# தேர்தலை நடத்த ஆணைக்குழு தயார் எனில் நாமும் தயார்தான்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார யாழில் தெரிவிப்பு

(யாழ்.நிருபர் )

அரசாங்கத்திடம், அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுக்கவே நிதியில்லை. இந்நிலையில், நிதியைத் தேடி தேர்தல் நடத்தத் தயார் என்றால் தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்தட்டும். நாம் தேர்தலை எதிர்கொள்ளத் தயாரென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் தினத்தைத் தீர்மானிப்பது, தேர்தலை நடத்துவதா, இல்லையா என்று தீர்மானிப்பது,



தேர்தல் செலவுக்கான பணத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்வது என்று தீர்மானிப்பது போன்றவை தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும்.

தற்போது எமது நாட்டைக் கொண்டு நடத்துவதற்கே பணம் இல்லை. அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்க, பாடசாலை மாணவர்களுக்கு சீருடை, கல்வி உபகரணங்கள் வழங்கப் பணமில்லை.

அது மட்டுமின்றி, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட சேவைகளின் செலவு சமாளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. வீதிகளைப் புனரமைக்க என எதற்கும் நாட்டில் நிதியில்லை.

இவ்வாறான நிலையில், தேர்தலை நடத்த, தேர்தல் செலவுக்கான நிதியைத் திரட்டி தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தால், அந்தத் தேர்தலை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே உள்ளோம் என்றார்.



இலங்கை விவசாயத் திணைக்கள வரலாற்றில் முதல் தடவையாக பெண்ணொருவர் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆரையம்பதியை சேர்ந்த பரசுராமன் மாலதியே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளார். அவர் கடந்த 2ஆம் திகதி கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

## நனோ முறைமையை வடக்கில் பயன்படுத்த நடவடிக்கை



வடமாகாண மக்களின் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படும்.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளன.

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என்ற அரசின் கருத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாள் ஒன்றுக்கு 2000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டுள்ளன என்று மீள்குடியேற்றப் பிரிவு தெரிவிக்கிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிக்கும் போது அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பு மூலம் நச்சுகள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

2021இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு 209 மில்லியன் ரூபாவாகும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பின் அமைச்சின் கீழ் செயற்படும் மீள்குடியேற்றப் பிரிவின் இந்தத் திட்டத்தின் சுமார் 60% கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் காரணமாக நனோ நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் நிறைவு காலதாமதமானது என்றும் அந்தப் பிரிவு குறிப்பிடுகிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்தது.



மானிப்பாய் பிரதேசசபையினால், J/134 நவாலி வடக்கு முதியோர் சங்கத்தில் (பகல் பராமரிப்பு நிலையம்) முதியோருக்கான சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநெசன், பிரதேச சபை உறுப்பினர்கள், முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் சத்துணவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தவிசாளர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

# சேவைகளை நிர்ணயித்துச் செயற்படும் விதிமுறை அமைச்சர்களுக்கும் அவசியம்

## சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர்



அரசாங்கத்தின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு இலக்குகளை நிர்ணயித்துச் செயற்படுமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் போன்று, அமைச்சர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு செய்வது, அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னேற்ற உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில், அரச ஊழியர்கள் சத்தியப்பிரமாணம் செய்து பணியை ஆரம்பிக்கும் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நசீர் அஹமட் கூறியதாவது,

அமைச்சுகளின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக்குவதற்கு இலக்குகளை நிர்ணயித்துச் செயற்படுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

காலாண்டுக்குள் சாதிக்கப்பட்டவற்றை மதிப்பீடு செய்வதற்கு இவை உதவும். இந்த மதிப்பீடுகள் செயற்பாடுகளின் மந்த கதியையோ அல்லது முன்னேற்றத்தையோ அளவிட உதவும்.

எனவே, இதேபோன்று, அமைச்சர்களுக்கும் அறிவுறுத்தப்படுவது அவசியம். இது தவிர, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களும் அடையவுள்ள இலக்குகள் மற்றும் சாதனைகளை நிர்ணயித்துச் செயற்படுவது அவசியம். நாடு தற்போது பொருளாதாரத்தில் வீழ்ந்துள்ள நிலையில், நோக்குகளை நிர்ணயித்துச் செயற்படுவதே சிறந்தது. அரசாங்கத்தின் சாதனைகளை அடைந்துகொள்வதற்கான செயற்பாடுகள் திட்டமிட்ட முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். 2023 பட்ஜட் இலக்குகளை வெற்றி கொள்ள இதுவே வழிகோலும். பொது மக்களின் ஒத்துழைப்புகளும் இதற்கு அவசியம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.









தேசிய மக்கள் சக்தியின் தொகுதிவாரியான மக்கள் சந்திப்பு தம்புத்தேகமவில் அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

**05-01-2023 சுபகிருது வருடம் மார்கழி மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை**

- மேஷம்: வாக்குறுதியால் தொல்லை, எதிர்பாராத பணச் செலவு.
- ரிஷபம்: உடல்நலம் மேம்படும், நீண்ட நாள் நிலுவையில் இருந்த பணம் கைக்கு கிடைக்கும்.
- மிதுனம்: பயணங்களால் தொல்லை, நினைத்த காரியம் தாமதம்.
- கடகம்: தொழில் வியாபாரத்தில் இலாபம், பெண்களால் நன்மை.
- சிம்மம்: பொருள் - தனலாபம் உண்டு, திட்டமிட்ட காரியம் கைகூடும்.
- கன்னி: வெளியிடப் பயணங்களால் நன்மை, நண்பர் உதவி.
- துலாம்: கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள், புதிய முயற்சிகள் வேண்டாம்.
- விருச்சிகம்: எதிர்பாராத பண வரவு, கூட்டு வியாபாரத்தில் இலாபம்.
- தனுசு: நினைத்த காரியத்தில் வெற்றி, கேட்ட கடன் கிடைக்கும்.
- மகரம்: புத்திரர்களால் செலவுகள், தொழில் நட்டம்.
- கும்பம்: தாயின் உடல் நிலையால் கவலை, வீடு வாகனத்தால் தொல்லைகள்.
- மீனம்: நினைத்த காரியத்தில் வெற்றி, உறவினரால் இலாபங்கள்.

| | |
|---|---|
| **திதி:** | சதுர்தசி பின்னிரவு 2.14 வரை பின் பூரணை |
| **நட்சத்திரம்:** | மிருகசீரிடம் இரவு 9.26 வரை பின் திருவாதிரை |
| **யோகம்:** | மரண யோகம் (சுப காரியம் கூடாது) |
| **வார சூலை:** | தெற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | மு.ப.11.29 - 12.29 மணிவரை (சந்திர ஹோரை) |
| **ராகு காலம்:** | - - 2-1 மணிவரை |
| **எமகண்டம் :** | 6.29 - 7.59 மணிவரை |
| **குளிகை :** | 9.29 - 10.59 மணிவரை |
| **சந்திராஷ்டமம்:** | துலா ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |
| **விசேட தினம்:** | நடேஷர் ஆர்த்ராபிஷேகம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலை பேசி : 077-0525325
078-6759739


# பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 ஜனவரி மாதம் 24 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

# வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.
e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜனவரி 05ஆம் திகதி, வியாழக்கிழமை**

# ரணிலின் இரட்டை முகம்!

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை புரியாத புதிர் என்ற அடிப்படையில் செயற்படும் ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் என்பது அன்று முதல் இன்றுவரை அரசியல் வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும், புரியும்.

ஜெ.ஆர்.ஜெயவர்தனவின் நெருங்கிய உறவினரான ரணிலுக்கு அரசியல் சூட்சுமமும் கபடத்தனமும் இயற்கையாகவே வந்திருக்கிறது. ஒரு காலத்தில் அமைதிப்பேச்சு என்று ஒருபுறமும், புலிகள் இயக்கத்தை உடைப்பது என்று மறுபுறமும் அவர் காய்களை நகர்த்தியவர். அதேபோல் சந்திரிகா நல்லிணக்க முயற்சிகளை எடுத்தபோது அதற்கு ஆதரவளிப்பவராக தன்னைக் காட்டிக்கொண்டு தனது நெருங்கிய சகாக்களை வைத்து அதனை எதிர்த்தவர் அவர். இப்படி பலவற்றை வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறலாம். இப்போது புதிதாக சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஏழரை தசாப்த காலம் புரையோடித் தீர்க்கப்படாமல் இழுபடும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு, இன்னும் ஒரு மாத காலத்துக்குள் தீர்வுகாண காலக்கெடு விதித்துச் செயற்படுகின்றார் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு யாது, மார்க்கம் என்ன என்பதை தாம் அறிவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று அலப்பறை பண்ணுகிறார் ஜனாதிபதி.

நல்லது. அதனைச் செய்வதற்குக் கூடியிருந்து பேசி, இணக்கத்திற்கான மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதற்கு புதிய சூழலை ஏற்படுத்துங்கள் என்றனர் இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பும் பாதிக்கப்பட்ட தரப்புமான தமிழ் மக்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிட்டு, அதனை நீக்கி, அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவித்து, நல்லெண்ண சூழலையும் சமிக்ஞையையும் காட்டுங்கள் என்றனர் அவர்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்குகின்றோம், ஐந்து கைதிகளுக்கு விடுதலை, இன்னும் சில கைதிகளுக்கு மன்னிப்பு என்றெல்லாம் வாய்ப்பந்தல் போட்டார்களே தவிர, ஏதும் செயலில் உருப்படியாக நடக்கவில்லை.

அப்படி நடக்காவிட்டாலும் பரவாயில்லை, அவற்றுக்கு மாறாகப் பயங்கரவாதச் சட்டம் புதிது, புதிதாக ஆட்கள் மீது பாய்கிறது. அரசியல் கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வேலைதான் களத்தில் நடக்கின்றது.

உயிரிழந்த உறவுகளுக்கு அமைதியாக நினைவேந்தும் உரிமை மக்களுக்கு உண்டு. அதை மறுக்கக்கூடாது என்று கொள்கை விளக்கப் பிரகடனங்கள், உபதேசங்கள் செய்கின்றார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால், அவரின் படைகளோ அதற்குத் தலைகீழாக நடக்கின்றன.

2020இல் கோட்டாபயவின் எதேச்சதிகார ஆட்சியில், முன்னர் அகிம்சைப் போரில் உண்ணாவிரதப் போராட்டத்தில் காந்திய வழியில் ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்தாமல், அணு அணுவாகச் செத்து, சாவைத் தழுவிய தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தில் விளக்கேற்றி அவருக்கு அஞ்சலி செய்த குற்றத்திற்காக 2020இல் கைது செய்யப்பட்டார் சிவாஜிலிங்கம். சாதாரண சட்டத்தின் கீழேயே பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

இப்போது அந்த விடயத்திற்காக சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பில் வழக்குத் தொடுக்கப்பட்டு, எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றத்திற்கு வருமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தச் சமயத்தில் அன்றைய தினம் அவர் நீதிமன்றத்தில் பிரசன்னமானால், அவரும் அரசியல் கைதியாவது நிச்சயம்.

அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிடவும் இல்லை - அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதுமில்லை. மாறாக, அவர்களின் எண்ணிக்கையைத்தான் அதிகரிக்கப் போகின்றது என்பதையே இப்படியான செயற்பாடுகள் காட்டுகின்றன. தமிழருக்குத் தீர்வு தருவதாக சர்வதேசத்திற்கும் தமிழருக்கும் காட்டவேண்டும். மறுபக்கம் தமிழரை அடக்கி வைக்கிறோம் என்று தென்னிலங்கைக்கும் சிங்கள இனவாதிகளுக்கும் காட்ட வேண்டும் என்ற நிலையில்தான் ரணிலின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தமிழரைப் பொறுத்தவரை ரணிலின் செயற்பாடுகள் அவர்களுக்கு புதுமையல்ல. பழைமை.

# இனநெருக்கடிக்குத் தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சிகளில் காணமுடியாமல் இருக்கும் அம்சம்

நீண்டகால இனநெருக்கடியை இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் அளவில் தீர்த்துவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிக்காட்டியிருக்கும் உறுதிப்பாடு ஏனைய விவகாரங்களிலும் நேர்மறையான முன்னேற்றங்களை காண்பதற்கு நம்பிக்கை தரக்கூடிய தளமாக இருக்கமுடியும். இது நடைமுறை யதார்த்தமாக மாற்றப்படவேண்டிய ஒரு நம்பிக்கையாகும். இனநெருக்கடியை அரசியல் ரீதியில் தீர்த்துவைப்பதற்கு கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் வரலாறு ஒரு நம்பிக்கையான தோற்றத்தை தரவில்லை.

இனநெருக்கடியைத் தீர்ப்பதற்கு முயற்சித்து தோல்விகண்ட இலங்கைத் தலைவர்களின் பட்டியல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவில் தொடங்கி தற்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க வரை நீடிக்கிறது. முன்னர் பிரதமராக தலைமைத்துவ பாத்திரத்தை வகித்தவேளை விக்கிரமசிங்க இந்த முயற்சியில் தோல்வி கண்டார். ஏனைய சமூகங்களின் கோரிக்கைகளை அரைவாசி அளவுக்கேனும் நிறைவேற்றுவதற்கு விட்டுக்கொடுப்பை செய்வதற்கான சாத்தியப்பாட்டுக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட அரசியல் எதிர்ப்பு அந்த தலைவர்களினால் சமாளிக்கமுடியாத அளவுக்கு பலமானவையாக இருந்தன.

ஆனால், கடந்த காலத்தைப் போலன்றி இம்முறை இனநெருக்கடி தீர்க்கப்படக்கூடியதாக இருக்கும் என்று நம்புவதற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம் மிகவும் முக்கியமானது. பேச்சுவார்த்தை மேசைக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் கொண்டுவரக்கூடிய தலைமைத்துவ ஆற்றலே அதுவாகும். ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த அவர் தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தக்கூடியவராக இருக்கிறார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்திய அவரின் மாமனார் ''அந்த அதிகாரங்களின் மூலம் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் அதிகாரம் ஒன்று மாத்திரமே தன்னிடம் இல்லை'' என்று சொன்னார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு கடந்த வருட பிற்பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தத் திருத்தத்தின் கீழ் அமைக்கப்படவேண்டிய நிறுவனங்களுக்கு தங்களில் யார் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இணக்கப்பாடொன்றுக்கு வர இயலாமல் இருக்கும் அடுத்த மட்ட அரசியல்வாதிகள் மத்தியில் காணப்படும் ஐக்கியமின்மை தற்போதைய தருணத்தில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

பொதுமக்களின் அபிப்பிராயத்தை உருப்படியான முறையில் பிரதிபலிக்க முடியாத வகையில் நாடாளுமன்றத்தின் நியாயப்பாடு சிதைக்கப்பட்டுவிட்டமை இரண்டாவது காரணமாகும். ஜனாதிபதியுடன் சேர்த்து முன்னைய அரசாங்கத்தை வீழ்த்திய போராட்ட இயக்கம், பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டையும் முறைமை மாற்றத்தையும் தேர்தல்களையும் கோரி நின்றது. இது நாடாளுமன்றத்திலுள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் விரைவாக பொதுத்தேர்தலை சந்திக்க விரும்பாத அளவுக்கு அவர்களின் நீண்டகால திட்டங்களை சீர்குலைத்துவிட்டது. தற்போது அவர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களைக் கூட விரும்பவில்லை என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெரும்பாலும் ஜனாதிபதியை எதிர்ப்பதற்கு விரும்பமாட்டார்கள். முன்கூட்டிய பொதுத்தேர்தல் ஒன்றில் பொதுமக்களின் ஆத்திரத்தில் இருந்து தப்புவதற்கு அவரது நல்லெண்ணத்திலேயே அவர்கள் தங்கியிருக்கிறார்கள். இன்னும் மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடக்கூடிய அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுவிடுவார் என்பது கவனிக்கத்தக்கது.

### மாறிவிட்ட மனப்பான்மை

நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பாலான எதிர்க்கட்சிகள் இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு இணங்கக் கூடியவையாக இருப்பது மூன்றாவது காரணமாகும். எதிரணியிலுள்ள முக்கிய கட்சிகள் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் குறுகிய தேசியவாத நிலைப்பாடுகளை ஆதரித்துப் பேசாததற்கான விலையை செலுத்தின. அவை இனத்துவ விவகாரங்களை விடுத்து மற்றைய பிரச்சினைகளைப் பற்றியே பிரசாரம் செய்தன.

இது இனநெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை எதிரணியிலிருந்த அரசியல் கட்சிகள் பெரும்பாலும் எதிர்த்த பெருங்கேடான கடந்தகால அணுகுமுறையிலிருந்து விடுபடுவதற்கான ஆற்றலை அவை கொண்டிருக்கின்றன என்பதற்கான அறிகுறிகளை காட்டுகிறது. எதிரணிக் கட்சிகள் குறுகிய இனத்துவ தேசியவாத அரசியலில் ஈடுபடுவதும் சாத்தியமில்லை. ஏனென்றால், அவற்றுக்கு அது தேவையில்லை. இம்முறை பொருளாதார வீழ்ச்சியும் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளுமே அவை பிரசாரப்படுத்தக்கூடிய பிரச்சினைகளாக இருக்கும்.

நாட்டில் அரசியல் அபிப்பிராயத்தின் இயல்பில் ஏற்பட்டிருக்கும் மாறுதலே நான்காவது காரணமாகும். கடந்த வருடம் இடம்பெற்ற பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு நாட்டுக்கு தேவைப்படுவது அடிப்படைச் சீர்திருத்தங்களே என்ற ஒரு உணர்வு பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது. போராட்ட இயக்க காலப்பகுதியில் மக்கள் மத்தியில் பிரபல்யமாகியிருந்த முறைமை மாற்றம் (System Change) என்ற சுலோகத்தின் மூலம் இந்த உணர்வு வெளிப்பட்டது.

பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கை அதாவது அரச நிதியைக் களவாடியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதுடன், அவர்களது சொத்துகளும் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்பதும் போராட்ட இயக்க சுலோகங்களில் ஒன்று. இனத்துவ மற்றும் மத தேசியவாதத் திரைக்குப் பின்னால் மறைந்திருந்துகொண்டு கடந்த 74 வருடகாலமாக முன்னெடுக்கப்பட்ட தவறான ஆட்சிமுறை மற்றும் முறைகேடுகள் மீதும் போராட்ட இயக்கம் கவனத்தைச் செலுத்தியது.

சகல இனத்துவ மற்றும் சமய சமூகங்களினதும் பிரஜைகளும் சமத்துவமான முறையில் நடத்தப்படவேண்டும் என்பதுடன், ஆதிகால சிந்தனைகளின் அடிப்படையில் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தியவர்கள் நிராகரிக்கப்படவேண்டும் என்ற சுலோகமும் முன்வைக்கப்பட்டது.

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டியது நாட்டு மக்கள் சகலரும் மோதலின்றி ஒன்றாக வாழ்வதற்கு வகை செய்வதற்காக மாத்திரமல்ல, நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இந்த பிரச்சினையின் விளைவாக ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடின்மையையும் வன்முறையையும் இல்லாமல் செய்வதற்கும் முக்கியமானதாகும். நாட்டில் பொருளாதார முதலீடுகளுக்கு பெரிய முட்டுக்கட்டையாக உறுதிப்பாடின்மையும் வன்முறையும் இருந்து வந்தன.

1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் சுதந்திர சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை மாற்றமும் பெருமளவு சர்வதேச உதவிகளைக் கொண்டுவந்தன. மகாவலி திசை திருப்பல் திட்டம் இதில் முக்கியமானது. பிரிட்டிஷ் மக்களினால் இலங்கைக்கு முற்றிலும் கொடையாக வழங்கப்பட்டதே விக்டோரியா நீர்த்தேக்கமாகும். ஆனால், 1983 ஜூலையில் இடம்பெற்ற இன வன்செயல்கள் சர்வதேச முதலீடுகளுடனான பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்பை நிர்மூலம் செய்தன.

### 'அரகலய' விடுத்த கோரிக்கை

இப்போது தேசிய பொருளாதாரத்தின் மீது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு அவசியமான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுக்காக இலங்கை இன்னமும் காத்துக்கொண்டு நிற்கிறது. ஆனால், இந்த ஆதரவு இலங்கை திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் கொடுப்பனவுகளில் ஒரு விகிதாசார அளவில் குறைப்பைச் செய்வதற்கு சீனா காட்டுகின்ற தயக்கத்தினால் தாமதமாகிறது. வங்குரோத்து அடைந்துவிட்ட நாடொன்று பெரிய பொருளாதார வல்லமை கொண்ட நாட்டிடம் விடுக்கின்ற நியாயபூர்வமான வேண்டுகோளாக இது இருக்கின்ற நிலையில், சீனா ஒத்துழைக்காமல் இருப்பதற்கு வேறு புவிசார் அரசியல் மற்றும் மூலோபாய காரணங்களும் இருக்கக்கூடும். இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கினால் தன்னிடம் கடன்பட்ட (இலங்கையை விடவும் வறுமையான) பல நாடுகள் விடுக்கக்கூடிய வேண்டுகோளுக்கும் இணங்கவேண்டிவரும் என்று சீனா நினைப்பதாக பொதுவாக நம்பப்படுகிறது.

இந்த பின்னணியில் வேறு தரப்புகளிடம் இருந்து சர்வதேச உதவியை இலங்கை நாடி நிற்கிறது. நீண்டகால இனநெருக்கடிக்கு காணப்படக்கூடிய இணக்கத்தீர்வு இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் நேர்மறையான ஒரு படிமம் ஏற்படுவதற்கு வழி வகுக்கலாம். சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அனுசரணை வழங்க வெவ்வேறு கட்டங்களில் முன்வந்த இந்தியா, ஜப்பான், நோர்வே, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் பாரதூரமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு ஆதரவை வழங்குவதற்கு ஆர்வப்படக்கூடும். அந்த நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழ்ச்சமூகம் இலங்கையின் சார்பில் - குறிப்பாக பெருமளவுக்கு கவனிக்கப்படாமல் இருக்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு - ஆதரவுக் குரல் வலிமையான ஒரு சக்தியாக விளங்கமுடியும்.

ஆனால், பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் என்பது இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் காணமுடியாமல் இருக்கும் அம்சமாகும்.

பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளிலும் இதே இடைவெளி இருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் இறுதியாக நிறைவேற்றிய தீர்மானத்தில் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும், பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் பிரச்சினை புறக்கணிக்கப்படுகின்றது.

போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரை, அவை கடந்த காலத்தில் இடம்பெற்றவை, தற்போது அவ்வாறான பிரச்சினை கிடையாது என்று கூறப்படமுடியும். ஆனால், பொருளாதாரக் குற்றங்களைப் பொறுத்தவரை கடந்தகால செயல்கள் இப்போது மீண்டும் பெருமளவில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. இது ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும். தேசிய நல்லிணக்கமும் அபிவிருத்தியும் நடைமுறை யதார்த்தங்களாக வேண்டுமென்றால் ஜனாதிபதியும் அரசாங்கமும் ஊழல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களின் நலன்களில் மானசீகமான அக்கறையைக் காண்பிக்கவேண்டும்.



**கலாநிதி**
**ஜெகான் பெரேரா**

## இன்றைய நாளில்...

- 1837 – இலங்கையில் முதலாவது சீனித் தொழிற்சாலை தும்பறை என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1931 – மொஸ்கோவில் கிறிஸ்து மீட்பர் பேராலயம் ஸ்டாலினின் உத்தரவின் பேரில் இடிக்கப்பட்டது.
- 1952 – லண்டனில் ஏற்பட்ட பெரும் புகைமாசுப் பேரிடர் காரணமாக அடுத்தடுத்த மாதங்களில் 12,000 பேர் வரை உயிரிழந்தனர். 200,000 பேர் வரை பாதிக்கப்பட்டனர்.
- 1995 – ஈழப் போர்: இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகளிடம் இருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.

2003 – இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் குளிர்திரவ ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்திருப்பதாக அறிவித்தது.

2006 – பிஜியில் இராணுவப் புரட்சி மூலம் அதன் இராணுவத் தளபதி பிராங்க் பைனிமரமா அரசைக் கைப்பற்றினார்.

2006 – இந்திய மத்திய அரசில் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த சிபு சோரன் 1994இல் அவரது உதவியாளரைக் கொலைசெய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெற்றார்.

2017 – 2014 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் தடைசெய்யப்பட்ட போதைப்பொருளைப் பயன்படுத்திய குற்றத்திற்காக 2018 குளிர்கால ஒலிம்பிக்கில் போட்டியிட ரஷ்யாவுக்கு பன்னாட்டு ஒலிம்பிக் குழு தடைவிதித்தது.

## நக்கல் நமசிவாயம்

எலெக்சனுக்கு ஓட்டுப்போடப் போகும் அந்த நிமிஷம் வரைக்கும் எனக்கெண்டா இந்தத் தேர்தல் நடக்குமெண்டு நிச்சயமில்ல பாருங்கோ..!



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 04.01.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 131 2361 | 142 6515 |
| கனேடியன் டொலர் | 151 706 | 163 4462 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 2545 | 43 4241 |
| யூரோ | 268 0107 | 283 4860 |
| ஜப்பான் யென் | 1 6303 | 1 7433 |
| சிங்கப்பூர் டொலர் | 156 208 | 167 2363 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 5127 | 336 12 8 |
| சுவிஸ் பிரான்ங் | 271 8703 | 3 0 3800 |
| ஐ.அ.டொலர் | 248 8630 | 260 4613 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 815 |
| குவைட் | குவைட் தினார் | 0,074 6 3 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 828 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 10 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4658 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7481 |

# மாற்றத்திற்காக போராடியோரை தேர்தலுக்கு தயாராகுமாறு சாணக்கியன் எம்.பி. அழைப்பு



மாற்றத்திற்காக போராடியவர்கள் அனைவரும் தேர்தலுக்குத் தயாராக வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லை நிர்ணய குழுவை நேற்று (புதன்கிழமை) சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

"மாற்றத்தைக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தற்போது ஜனநாயக ரீதியாக ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்பை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே, அவர்கள் அனைவரும் ஆர்வமாக இந்தத் தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலர் நிதி இல்லை என சொல்லும் நொண்டிச்சாட்டுகள் தொடர்பில் கரிசனை செலுத்தாமல், அனைவரும் தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

அதேபோன்று உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் மேலும் பல விடயங்கள் தொடர்பில் நாம் பேசியிருந்தோம். குறிப்பாக வட்டாரங்களின் எண்ணிக்கை யைக் குறைக்கும் வகையிலான சில செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதற்கு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் துணை போகும் வகையில் செயற்படுகின்றனர்.

எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வட்டாரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமே ஒழிய குறைக்கப்பட்டக் கூடாது. இந்த விடயத்தை நாம் வலியுறுத்தியுள்ளோம்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வி.ஐ.பி. சோஷலிசவாதிகளின் கிண்டல்களுக்கு சளைக்கவும் மாட்டேன்; மாணவர்களுக்கான பஸ் வழங்கும் சேவையை நிறுத்தவும் மாட்டேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டமாகத் தெரிவிப்பு






சஜித் பிரேமதாச பஸ்களை வழங்குவதே இன்று சகலரினதும் பேசுபொருளாக மாறியுள்ளதாகவும், மேலும் சிலர் சஜித் பஸ்ஸை செலுத்துவதாக தெரிவிக்கின்றனர் எனவும், அதனால் 'பஸ் மேன்' என கிண்டலடிக்கின்றனர் எனவும், இவ்வாறு கிண்டலடிப்பது வி.ஐ.பி. மற்றும் வி.வி.ஐ.பி. சோஷலிசவாதிகள் எனவும், இத்தகைய காட்போர்ட் இடதுசாரிகளின் கிண்டல்களைத்தான் பொருட்படுத்துவதாக இல்லை எனவும், இவர்களின் விமர்சனங்களுக்காக பஸ் பகிர்வதை நிறுத்தப்போவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விமர்சனங்களை விட விடயதானங்கள் ஆலோசிக்கப்பட வேண்டும் எனவும், இவ்வாறான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முதன்மை நோக்கம் இந்நாட்டில் கல்வியில் காணப்படும் பிளவைக் குறைப்பதே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் (3) தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 58ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் வண்டியொன்று மொரட்டுவை மெதடிஸ்ட் உயர்நிலை தேசியப்பாடசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறே, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பெண்கள் மற்றும் சிறுமிகளின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு ஆரோக்கிய துவாய் தொடர்பில் புதிய நடவடிக்கை எடுக்க யோசனை முன்வைக்கப்பட்ட சமயத்திலும் தான் 'பேட் மேன்' என்று அழைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சோஷலிசம் பற்றிப் பேசுபவர்கள், ஆடம்பர வசதிகளை அனுபவிக்கிறார்கள் எனவும், நாட்டின் குழந்தைகள் பாதிக்கப்படும்போது அவர்களின் குழந்தைகள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்கிறார்கள் எனவும், ஆடம்பர குளிரூட்டப்பட்ட கட்சி அலுவலகங்களை நிர்மாணித்து, இப்படியான கிண்டல்களைச் செய்வதன் மூலம் இத்தகைய காட்போர்ட் சோஷலிஸ்டுகளுக்கு ஏமாற மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பஸ்களை வழங்குவதன் மூலம் கல்வியில் நிலவும் வேறுபாடுகளை களையவே தாம் முயற்சிப்பதாகவும், நாட்டிலுள்ள செல்வந்தர்களின் பிள்ளைகள் சர்வதேச பாடசாலைக்கும் தனியார் பாடசாலைக்கும் செல்வதாகவும், அவர்கள் அனைத்தையும் ஆங்கில மொழியில் கற்றுக்கொள்கின்றனர் எனவும் அரச பாடசாலைகளில் இத்தகைய போக்கு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பை மையமாகக் கொண்ட பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகள் கணினி ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி ஆய்வுகூடங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றன என்றாலும், கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் அவ்வாறான வசதிகள் இல்லை எனவும், இதன் காரணமாக கல்வியில் பெரும் பாகுபாடு ஏற்பட்டுள்ளதாகவும், இப்பிரிவை இல்லாதொழித்து அனைவருக்கும் சமமான கல்வி முறையை உருவாக்குவதற்கான முதற்கட்டமாக பஸ் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரச பாடசாலை மாணவர்கள் போட்டிகளுக்கு வாடகை வாகனங்கள் எடுத்துச் செல்லும் நிலையே தற்போது நிலவுவதாகவும், பஸ் வழங்குவதன் ஊடாக குறித்த பிரச்சினைக்கு குறிப்பிட்டளவு தீர்வு கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய மற்றும் வெளிநாட்டு தனவந்தர்கள் தம்மையும் தங்கள் கட்சியையும் நம்புகிறார்கள் எனவும், ஏனென்றால், தம்மைச் சுற்றி கமிஷன் பெறுபவர்கள் மற்றும் ஊழல் செய்பவர்கள் இல்லை எனவும், அந்த நம்பிக்கையைப் பாதுகாத்துக்கொண்டு அத்தகைய திட்டங்களை வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

70 வருட ஜனநாயக நாட்டில் அபிவிருத்தியென்ற போர்வையில் வரியை சூறையாடினர் எனவும், எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை மேற்கொண்டு அரசியலை மேற்கொண்டனர் எனவும், இந்த சம்பிரதாய போக்குக்கு அப்பால் சென்று தாம் உள்ளிட்ட எதிர்க்கட்சி புதிய கற்பிதங்களை சேர்த்தாகவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர்கள் முறைமை மாற்றத்தையே கோருகின்றனர் எனவும், நாங்கள் அந்த முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவோம் எனவும், நாட்டின் கல்வித்துறைக்கும் சுகாதாரத்துறைக்கும் சேவையாற்றுவதற்காக பதவிகள் அவசியமில்லை எனவும், ஜனாதிபதி, பிரதமர், அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள் என பதவிகள் இவற்றைக்கு அவசியமில்லை எனவும் தாம் இயலுமை ஆற்றல் கொண்டவராக இருந்தால் இத்தகைய பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். சம்பிரதாய கட்டமைப்பிலிருந்து வெளியேறி செயற்படக்கூடிய தலைவர் இந்நாட்டிற்குத் தேவை எனவும், வருங்காலத் தலைவருக்கு டொலர், பவுன்களை நாட்டிற்குக் கொண்டு வரும் திறன் இருக்க வேண்டும் எனவும், தற்போது ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இது போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கஞ்சிப்பானை இம்ரானின் பிணையாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கஞ்சிப்பானை இம்ரான் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளமையால் அவரது பிணையாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கஞ்சிப்பானை இம்ரானுக்காக அவரது சகோதரரும் வேறொருவரும் பிணையாளர்களாகவுள்ளனர்.


கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கஞ்சிப்பானை இம்ரான், வெளிநாட்டுப் பயணத் தடை உள்ளிட்ட நிபந்தனைகளுடன் 50 இலட்சம் ரூபா சீரப் பிணையில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் கடந்த 20ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். பிணையில் விடுவிக்கப்பட்ட 5 நாட்களின் பின்னர் கஞ்சிப்பானை இம்ரான் தமிழ்நாடு – இராமேஸ்வரம் ஊடாக இந்தியாவிற்குள் பிரவேசித்துள்ளதாக இந்திய புலனாய்வுப் பிரிவு வெளிக்கொணர்ந்தது.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும் என கஞ்சிப்பானை இம்ரானுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும், அவர் அவ்வாறு முன்னிலையாகாத நிலையில், அது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அதற்கமைய, கஞ்சிப்பானை இம்ரானின் சகோதரரையும் மற்றைய பிணையாளரையும் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தவணையின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## விபத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர் உயிரிழப்பு



விபத்தில் சிக்கிய மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வெற்றிலைக்கேணி பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மருதங்கேணி பிரதேச செயலக சிறு கைத்தொழில் பிரிவு உத்தியோகத்தர் யோகச்சந்திரன் பிரகலாதன் (வயது 42) படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

# யாழில் நடைபெறும் வர்த்தக கண்காட்சி குறித்து ஆலோசனை



(யாழ்.நிருபர்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 மற்றும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள 'குளோக்கல் பெயார் 2023' கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் பங்கேற்புடன் நேற்று புதன்கிழமை (04) மு.ப. 10:30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மாவட்ட செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'குளோக்கல் பெயார் 2023' கண்காட்சிக்கு செய்ய வேண்டிய ஒழுங்குபடுத்தல்கள் அதற்கு பொறுப்பானவர்களுடன் கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சி மூலம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களையும் உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைவாய்ப்பு வழங்குநர்களையும் ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைப்பதுடன், அமைச்சினால் வழங்கப்படும் சேவைகள், தொழிலாளர்களின் நலன்புரி பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் உள்ளூர் - வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் பெறுவதற்கு இப்பகுதி மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.01.03
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 4989 | ரூ. 14,045,167.00 | N | 7 3 7 4 4 7 |
| கொவிசெத | 3231 | ரூ. 67,792,707.60 | Q | 02 27 75 80 |
| தன நிதானய | 1019 | ரூ. 140,669,784.80 | B | 05 08 39 58 |

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1444 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,032,182.00
வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் 9 2 3 5 5 4

ராசி சுப பலன் / Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 298 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,555,465.60
வெற்றி இலக்கினம் மேஷம் | வெற்றி இலக்கங்கள் 11 30 57 61 | விசேட இலக்கினம் மேஷம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1337 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 290,754,426.00
ஆங்கில எழுத்து P | சுப்பர் இலக்கம் 12 | வெற்றி இலக்கங்கள் 12 28 61 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00





முன்னாள் பரிசுத்த பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் திருத்தந்தை இறைபதமேந்தியதை முன்னிட்டு அவருக்காக இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (04) முற்பகல் கொழும்பிலுள்ள அபோஸ்தலிக்க தூதரகத்திற்கு விஜயம் செய்தார். இலங்கைக்கான வத்திக்கான் அபோஸ்தலிக்க தூதுவர் புனித பிரையன் உடேக்வே ஆண்டகையைச் சந்தித்த ஜனாதிபதி, அவருடன் உரையாடலில் ஈடுபட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நூலில் குறிப்பொன்றையிட்டதுடன், 16ஆம் பெனடிக்ட் பரிசுத்த பாப்பரசரின் புகைப்படத்திற்கும் அஞ்சலி செலுத்தினார்.

# அரசியல் - பொருளாதாரக் கொலை செய்தவர்கள் தப்பிய வரலாறில்லை

## ஜே.வி.பி. முன்னாள் எம்.பி. லால்காந்த

(கண்டி நிருபர்)

ஒரு நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொலைகளை செய்தவர்கள் தப்பி வாழ்ந்த வரலாறுகள் எங்கும் இல்லை. இலங்கையில் அவ்வாறு செய்தோர் தற்போதைய ஆட்சி முடிவடையும் போது தப்பி ஓடுவதுதான் அவர்களுக்கு ஒரே வழி என்று ஜே.வி.பியின் முன்னாள் எம்.பியும் தொழிற்சங்கவாதியுமான கே.டி.லால்காந்த தெரிவித்தார். கண்டியில் இடம்பெற்ற அரசியல் கொள்கை விளக்கக் கூட்டம் ஒன்றில் கடந்த 1ஆம் திகதி உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் 'ரணில் – ராஜபக்ஷ ஆட்சி' என்ற இரு விடயங்களே பேசப்படுகின்றன. நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணமான 'ரணில் – ராஜபக்ஷ' கூட்டிணைப்பு நாட்டுக்கு பதில் கூறியாக வேண்டும். லசந்த விக்கிரமதுங்க, வசீம் தாஜுதீன் கொலை, உயிர்த்த ஞாயிறு சம்பவம் உட்பட எத்தனையோ கொலைகள் நடந்துள்ளன. இவை அனைத்திற்கும் அரசியல் சாயம் பூசிப் பேசப்படுகிறது. இவற்றுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். ஆனால் முறையான தீர்வு கிடைக்கவில்லை.

அதேபோல் நாட்டில் பாரிய பொருளாதாரக் கொலைகள் நடந்துள்ளன. இதனை சாதாரண மொழியில் ஊழல் என்பர். உலக வரலாற்றில் இப்படியான தவறுகளைச் செய்து தப்பியவர்கள் இல்லை. இன்றைய பிரச்சினைக்கு தீர்வாக பொதுத் தேர்தல் நடந்தால் தற்போதைய ஆட்சி வீழ்ச்சியடையும். அவ்வாறு ஏற்பட்டால் அவர்கள் நாட்டை விட்டுத் தப்பி ஓடுவதுதான் ஒரே வழி. எனவே அதுவரை அவர்கள் அதற்கு தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ள தமக்குத் தேவையான ஒரு ஆட்சியை தக்கவைத்துக் கொள்வர். அல்லது இயன்ற வரை தேர்தல்களை ஒத்தி வைத்துபோதிய கால அவகாசம் எடுப்பர். அதுவே தற்போது நடக்கிறது. எனவே இன்றைய ஆட்சியின் திருடர்களைப் பிடிக்க வேண்டுமாயின் ஜே.வி.பி. ஆட்சி அமைந்தால் மட்டுமே சாத்தியம். இல்லாவிட்டால் ஒருவரை ஒருவர் காப்பாற்றுவதிலேயே குறியாக இருப்பர். இதுவரை காலமும் அதுவே நடந்தது என்றார்.



# நானுஓயா டெஸ்போட் கோயிலில் திருட்டு

(செ.திவாகரன், ஆ.ரமேஷ்)



நானுஓயா பொலிஸ் பிரிவில் உள்ள டெஸ்போட் கீழ்ப்பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு தங்க நகைகள், உண்டியல் பணம் என்பன கொள்ளையிடப் பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினால் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். ஆலயத்தின் பின் நுழைவாயில் உடைக்கப்பட்டு உள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த பல்லாயிரம் ரூபா பெறுமதியான தாலியையும் ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலையும் உடைத்து பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இதற்கு முன்னரும் கூட இந்த ஆலயத்தில் தங்க நகைகள் மற்றும் பணம் திருடு போயிருந்தமை குறித்து நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இச்சம்பவம் குறித்து நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாத்தளை உணவக மலசலகூடங்களில் சுகாதார சீர்கேடு

## கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(மாத்தளை நிருபர்)

மாத்தளையிலுள்ள சில உணவகங்களின் மலசலகூடங்களின் சுகாதாரம் முறையாகப் பின்பற்றப்படாத காரணத்தால் மேற்படி உணவகங்களுக்கு செல்லும் நுகர்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மாத்தளை மாநகரிலும் நகர எல்லைக்குள்ளும் பல உணவகங்களில் இருக்கும் மலசலகூடங்கள் அசுத்தமாகவும் துர்நாற்றம் வீசும் நிலையிலும் காணப்படுவதுடன் மேற்படி மலசலகூடங்களில் பயன்படுத்தப்பட்ட மது போத்தல்களும் காணப்படுகின்றன. இது குறித்து மாத்தளை மாநகர சுகாதாரப் பிரிவினர் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

மாத்தளை மாநகரின் பிரதான வீதி, கொங்காவலை வீதி, ராஜ வீதி மற்றும் மந்தண்டாவளை ஆகிய பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் பல உணவகங்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாது இலாபத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு இயங்கிக்கொண்டிருப்பதால் பல்வேறு தொற்று நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

சீனா உட்பட பல நாடுகளில் கொரோனா வைரஸ் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருப்பதால் அதன் தாக்கம் எமது நாட்டுக்கும் பரவி பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடுமென அரசாங்கமும் சுகாதாரப் பிரிவினரும் எச்சரித்துள்ள நிலையில் சில உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் உரிமையாளர்களும் முகக்கவசம் மற்றும் கையுறைகள் அணியாமல் உணவு பரிமாறுவதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறு முற்றிலும் சுகாதார கேடுகளை விளைவிக்கும் வகையில் மேற்படி உணவகங்கள் செயல்படுவதாகவும் இது சம்பந்தமாக மாத்தளை மாநகர சுகாதாரப் பிரிவினர் கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.




ஐக்கிய தேசியக்கட்சி முன்னாள் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் காமினி அத்துகோரளவின் 21ஆவது நினைவு தின வைபவம் நிவித்திகல - தொலஸ்வலகந்தவில் இடம்பெற்றது. இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமரர் காமினி அத்துகோரளவின் சகோதரியுமான தலதா அத்துகோரளவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் சமய நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஏ.ஏ.எம்.பாயிஸ்)

# ஊவா மாகாண தமிழ்ப் பிரிவுக்கு புதிய நியமனம்

(எம்.செல்வராஜா)

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவுக்கு பொறுப்பாக பிரதி கல்விப் பணிப்பாளர் நடராஜன் வெங்கடேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று (04) புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.



கல்வி நிர்வாக சேவையில் 10 வருடகால அனுபவத்தை கொண்ட இவர் ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், மாகாண தமிழ்க் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பல்வேறு பதவிகளை வகித்ததுடன், இறுதியாக மாகாண கல்வித் திணைக்களத்தில் கணித பாடத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞானப் பிரிவில் விஞ்ஞான இளமாணி பட்டம் மற்றும் பட்டப் படிப்பின் விஞ்ஞானக் கல்வி டிப்ளோமாவை பெற்றதுடன், கல்வி முகாமைத்துவத்திற்கான முதுமாணிப் பட்டத்தையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மானிய விலையில் நடமாடும் அரிசி விநியோக சேவை காரைநகரில் ஆரம்பம்






(யாழ். நிருபர்)

காரைநகர் கூட்டுறவுச் சங்கம் ஊடாக நடமாடும் அரிசி விநியோக சேவை கடந்த திங்கட்கிழமை (02) ஆரம்பிக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிசெய்யும் நோக்கில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மானிய விலையில் தரமான அரிசியை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தை விலையிலும் 50 ரூபா விலை குறைத்து மானிய அடிப்படையில் வடமாகாண மக்களுக்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டம் முதல் கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டம் மூலம் மக்களின் பொருளாதாரச் சுமையை ஓரளவுக்குக் குறைத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிசெய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், காரைநகர் பிரதேச செயலாளர், காரைநகர் பிரதேச சபை தவிசாளர், காரைநகர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆளுநரின் கூட்டத்துக்கு செல்ல பின்னடிப்பு

## எதேச்சதிகார முதல்வருடன் சமரசத்துக்கு இடமில்லை என்றும் அறிவிப்பு

யாழ். மாநகர சபையில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை இணக்கப்பாட்டுடன் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய ஆளுநரின் செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டத்தில் தாம் பங்குபற்றும் எண்ணத்தில் இல்லை - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாக்களிப்பின்போது பெரும்பான்மை இல்லாத காரணத்தால் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்திருந்தார். இதனையடுத்து, யாழ். மாநகர சபையில் இக்கட்டான நிலையொன்று தோன்றியிருந்தது.

இந்நிலையில், மாநகர சபைக்கு புதிய முதல்வர் ஒருவரைத் தெரிவுசெய்வது தொடர்பில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சட்டமா அதிபரின் ஆலோசனையும் கோரப்பட்டுள்ள அதேநேரம், புதிய முதல்வர் தெரிவு இடம்பெற்றால் நீதிமன்றத்தை நாடி அதனைத் தடுப்போம் என்று முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்திருந்தார்.

உறுப்பினர்களிடையே சமரச முயற்சியொன்றை மேற்கொண்டு, சபையின் எஞ்சிய காலத்தைக் கொண்டுநடத்தத்தக்கதான திட்டமொன்றை முன்வைப்பதற்கு ஆளுநர் திட்டமிட்டிருப்பதனால், முன்னாள் முதல்வரின் எதேச்சதிகாரப் போக்கைக் கண்டிக்காமல், மீண்டும் சமரசத்துக்கு முனையும் ஆளுநரின் போக்குக்கு சம்மதிக்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக முறையில் - மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபை ஒன்றைக் கலைக்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு இல்லை. குறித்த சபை மீது அல்லது அதன் தவிசாளர் மீது முறைகேடு அல்லது மோசடிக்காக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று அந்த விசாரணைகளின் அடிப்படையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சபையை கலைக்கும் அதிகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கு உண்டு.

வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டால் தவிசாளர் பதவி விலகியதாகக் கருதப்பட்டு புதிய முதல்வரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு. யாழ். மாநகர சபை விடயத்தில் தன்னால் சபையைக் கொண்டுநடத்த முடியாத நிலையில் - தன் இயலாமை காரணமாக முதல்வர் பதவியிலிருந்து விலகி சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் ஒருவருக்காக, உள்ளூராட்சி சபைகள் கட்டளைச் சட்டத்துக்குப் புறம்பாக முதல்வர் தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயக உரிமை மீறலாகும். அதை விட அத்தகையதொரு முதல்வரோடு சமரசம் பேசச் செய்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எம்மை அழைத்து சமரசம் செய்ய முனையும் ஆளுநரின் முயற்சிக்கு நாம் துணைபோகத் தயாரில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை இது குறித்து எமக்கு எந்தவிதமான அறிவுறுத்தலையும் இதுவரை வழங்கவில்லை. கட்சித் தலைமையின் முடிவுக்கமைய நாம் நடந்துகொள்வோம். ஆயினும் கட்சித் தலைமை ஆளுநர் அலுவலகக் கூட்டத்துக்குச் செல்லுமாறு பணிக்காமல் நாம் ஆளுநரின் செயலாளரால் அழைக்கப்பட்ட கூட்டத்துக்குச் செல்ல மாட்டோம் - என்று தெரிவித்தனர்.

# தஞ்சமடைந்த மீனவர்களின் மீன்கள் விற்பனை; கைதான சமாசத் தலைவருக்குப் பிணை!

(யாழ். நிருபர்)

தஞ்சமடைந்த தமிழக மீனவர்களின் மீன்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்று பிணையில் விடுவித்துள்ளது.

தமிழக மீனவர்கள் நால்வர் பயணித்த படகு இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த 29ஆம் திகதி வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் கரையொதுங்கியது.

தமிழக மீனவர்களை பருத்தித்துறை பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றவேளை தமிழக மீனவர்களின் படகில் இருந்த மீன்களை அங்கு நின்றிருந்த ஒருவர் எடுத்து விற்பனை செய்திருந்தார்.

தமிழக மீனவர்களின் மீன்களை விற்பனை செய்த குற்றத்தில் குறித்த நபரை கடந்த 30ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸார் கைதுசெய்து, விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைகளையடுத்து, நீதிமன்று அந்நபரை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தது.

இந்நிலையில், குறித்த நபர் விசாரணைகளின்போது, சமாசத் தலைவரின் அறிவுறுத்தலுக்கமையவே தமிழக மீனவர்களின் படகில் இருந்த மீன்களை எடுத்து விற்பனை செய்தேன் என தெரிவித்ததன் அடிப்படையில் சமாசத் தலைவரை கடந்த திங்கட்கிழமை (02) கைதுசெய்து மறுநாள் 3ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் சமாசத் தலைவரை 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் மன்று விடுவித்து வழக்கை எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அதேவேளை, தமிழக மீனவர்களின் படகில் இருந்த மீன்கள் பழுதடையும் நிலையில் காணப்பட்டமையால், அதனை விற்பனைசெய்து அந்தப் பணத்தை தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்கும் நோக்குடனேயே மீன்களை விற்பனை செய்ய சமாசத் தலைவர் அறிவுறுத்தினார் என சமாசத் தலைவரின் தரப்பினர் தெரிவித்தனர்.

## மரக் கூட்டுத்தாபன யாழ் பிராந்திய அலுவலகத்திற்கு புதிய முகாமையாளர்



(சாவகச்சேரி நிருபர்)

அரசாங்க மரக் கூட்டுத்தாபன யாழ் பிராந்திய அலுவலகத்திற்கு புதிய முகாமையாளராக எம்.டபிள்யூ.என்.பீ.முதன்நாயக்க நியமிக்கப் பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்று முன்தினம் (03) சம்பிரதாயபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் யாழ் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை சிறுமி வன்புணர்வு; பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பகுதியில் 17 வயதான சிறுமி ஒருவரை 2 வருட காலமாக தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் (03) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 17 வயதான சிறுமி (தற்போது 19 வயது) ஒருவரை நிவாரணம் தருவதாக அழைத்துச்சென்று, பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி, அதனை காணொளி பதிவுகளாக எடுத்து, காணொளியை காட்டி மிரட்டி கடந்த இரண்டு வருடகாலமாக வன்புணர்ந்து வந்த நிலையில், கடந்த வாரம் சுகயீனமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், மருத்துவ சிகிச்சையின்போது, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்தமை கண்டறியப்பட்ட நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திவந்தமை தெரியவந்ததையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்து வந்த பருத்தித்துறை பொலிஸார், பொலிஸ் உத்தியோகத்தரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மூன்று துறைகளை அத்தியாவசிய சேவையாக அறிவித்து

## ஜனாதிபதி ரணிலால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு



மின்சாரம், பெற்றோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவுக்கமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, சிகிச்சையளித்தல் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

# கஞ்சாச் செடிகளை தோட்டத்தில் வளர்த்தவர் புத்தளத்தில் கைது



புத்தளம், நவகத்தேகம பகுதியில் விவசாயத் தோட்டமொன்றில் சட்டவிரோதமாக கஞ்சாச் செடி வளர்த்து வந்த குற்றச்சாட்டின்பேரில் நபரொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கஞ்சாச் செடிகள் சட்டவிரோதமாக வளர்க்கப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர். இதன்போது 10 அடி நீளமுடைய 6 கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நவகத்தேகம, கொங்கடவல பகுதியைச் சேர்ந்த ஒருவரென பொலிஸார் இதன்போது தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சாச் செடிகளையும் ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

# தேயிலை, மரக்கறிகளுக்கு கலப்பு உரம் அறிமுகம்



அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படும் விவசாயத் தேவை களுக்காக உரம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம், தேயிலை மற்றும் மரக்கறிகளுக்கு விசேட கலப்பு உரமொன்றை அறிமுகப்படுத்தி யுள்ளது. இது தொடர்பான நிகழ்வு விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

இது தொடர்பில் விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறப்பட்டுள்ளதாவது,

நெல் மற்றும் சோளப் பயிர் களுக்கு யூரியா மற்றும் எம்.ஓ.பி. உரங்கள் வழங்கப்பட்டபோதிலும், தேயிலை, மரக்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை களுக்கு உரம் வழங்கத் தவறியதாக விவசாயிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

எனவே, தேயிலை மற்றும் மரக்கறிகளுக்கு விசேட கலப்பு உரம் தயாரிக்கும் பணியை கொழும்பு கொமர்ஷல் பேர்டிலைசர் லிமிட்டெட்டிடமும் உருளைக்கிழங் குக்கான விசேட கலப்பு உரம் தயாரிக்கும் பணியை சிலோன் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் நிறுவனத்திடமும் ஒப்படைக்க அமைச்சர் நடவடிக்கை எடுத்தார்.

தேயிலை மற்றும் மரக்கறி உரம் 50 கிலோகொண்ட ஒரு மூடை விவசாயிகளுக்கு ரூ. 3,000இற்கு கிடைக்கும்.

கொழும்பு கொமர்ஷல் பேர்டிலைசர் லிமிட்டெட், 200 மெட்ரிக் தொன் உரத்தை உற்பத்தி செய்துள்ளதுடன், 6,000 மெட்ரிக் தொன் உற்பத்தியை இலக்காகக் கொண்டுள்ளது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு முத்திரை, நாணயம் வெளியீடு

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இரண்டு நினைவு முத்திரைகளையும் 75 நினைவு நாணயங்களையும் வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது .

தேசிய சுதந்திர தினம் நிகழ்வுகள் தொடர்பாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.

இந்த வருடத்திற்கான தேசிய சுதந்திர விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் "நமோ நமோ மாதா நூற்றாண்டுக்கு ஒரு படி" எனும் தொனிப்பொருளில் காலிமுகத் திடலில் நடைபெறவுள்ளது.

# கோப்பாயில் கொள்ளை

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கத்திமுனையில் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றி னில் நள்ளிரவுவேளை கூரிய ஆயுதங்களுடன் புகுந்த நான்கு பேர் அடங்கிய கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தோரை கத்திமுனையில் மிரட்டி 10 பவுண் தங்க நகைகள், ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மியன்மார் அகதிகளை நாடு கடத்த முற்பட்டவருக்கு மறியல்

யாழ். நிருபர்

மியன்மார் அகதிகளை நாடு கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரின் விளக்கமறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நீடித்து மல்லாகம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து படகில் தப்பிச் செல்ல முற்பட்டவேளை கடந்த 17ஆம் திகதி படகு பழுதடைந்ததில், வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தத்தளித்த நிலையில் 104 ரோஹிங்கிய அகதிகள் இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு, மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்துவைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

அதேவேளை, இவர்களை நாடு கடத்த முற்பட்டவர் என ஒருவருக்கு எதிராக காங்கேசன்துறை பொலிஸாரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற விசாரணைகளையடுத்து அவரை கடந்த 2ஆம் திகதிவரையில் வைக்குமாறு விளக்கமறியலில் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த 2ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபரின் விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதிவரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் வரி அதிகரிப்பு

92 ரக ஒக்டேன் பெற்றோல் மற்றும் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் வரி 27 ரூபாவிலிருந்து 52 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், சுப்பர் டீசலின் வரி 13 ரூபாவிலிருந்து 38 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தா பனம் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் விலை 10 ரூபாவாலும் விலை குறைப்பு செய்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலை குறைப்புக்கமைய லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையை குறைத்தது.

இருப்பினும், பெற்றோல் விலை குறைக்கப் படவில்லை.

# தேசிய பூங்காக்களில் நுழைய டொலரில் கட்டண அறவீடு

யால தேசிய பூங்கா உள்ளிட்ட இலங்கையின் தேசிய பூங்காக்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் டொலர்களில் பணம் செலுத்தி பயணச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளும் வசதிகளை இந்த மாதம்முதல் ஆரம்பிக்க வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடுகளை செய்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு டொலர்களை சம்பாதிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி இம் மாதத்திற்குள் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும், யால தேசிய பூங்காவி லிருந்து இத்திட்டத்தை முதலில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# கஹட்டகஸ்திஹிலியவில் பெண் ஒருவர் கொலை

கஹடகஸ்திஹிலிய, மஹபொத்தான பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு (03) மண்வெட்டியால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விவசாய நிலத்திற்கான நீரைப் பெற்றுக்கொள் வதில் ஏற்பட்ட முரண்பாடு வலுவடைந்ததில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருமகனால் தாக்கப்பட்டு பலத்த காயங்களுக் குள்ளான குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

கஹட்டகஸ்திஹிலிய, மஹபொத்தான பகுதியைச் சேர்ந்த 50 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 31 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹட்டகஸ்திஹிலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




## Legal Officer

Bnl o m Adkk nkt shnmr

Qualifications: Should be an Attorney – at – law with at least 2-3 years of working experience, Bachelor of law degree (LLB), Notarial License in English and Sinhala within the Colombo District.

Apply: b ddr adkknkt shnmr kj ,

**Manager – Human Resources,**
**Bell Solutions PVT Ltd,**
**No: 292, R A De Mel Mawatha, Colombo 03.**

## Preschool Teacher

mrshst shnm Adrs Bg mbd O d- bgnnk

Apply: rg k lfn l lkbnl / 0722152168

## HR Assistant (Female)

Bnl o m DN dbt hs

Email: mdng cc f l lkbnl

## Admin Executive

Bnl o m l na E bsn

Email: g inae bsn kj

## Sales Executive

Bnl o m nk Annyd

Email: hmen rnk annyd bnl

## Sales and Marketing Manager

Bnl o m l n Bglb dm mc n Ous SC

Apply: g h nbglbj dmkj . b ddr h nbglbj dmkj

**Human Resource Manager,**
**Imo Chicken and Agro Pvt LTD,**
**206/A, Minuwangoda Road, Udugampola.**

## Marketing Officer – Leasing Sales

A m d k m A m O B

Job Responsibilities: Prepare and Implement sales and action plans, Achieve the set individual targets, Generate and qualify leads and maintain a customer database.

Qualification: GCE O/L with passes for Mathematics and Enlish and 03 passes at GCE A/L

Email: b ddr rd k mkj

## Senior Sales Executive

Bnl o m S c d (O S) sc

Email: inar s c d kj bnl

## IT Intern – Engineering

Bnl o m hsdk h m

Qualification: Following or completed a degree or a part qualification in IT/Software engineering/MIS or in a relevant field, Proficiency in MS Office package, Computer Literacy.

Email: b ddr k mj hsdkbnl

## Content Writer

A m CEBB

Qualifications: Posses at least 1-2 years of experience as a Content Writer/ Creator/ research Writer/ Journalist with experience in Banking/ International Business/ Marketing / PR together with an outstanding portfoloio of work.

Apply: gssor . . cebbinaon s kodnoldrg bnl

**Senior Vice President (HR),**
**DFCC Bank. PLC, 73/5, Galle Road,**
**Colombo 05.**

# தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன புதிய பேராயர் பதவியேற்பு












(யாழ். நிருபர்)

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் 5ஆவது பேராயர் பேரருட்பணி அறிவர் வே.பத்மதயாளன் பதவியை பொறுப்பேற்கும் நிகழ்வும் அவரை வரவேற்கும் நிகழ்வும் நேற்று யாழ். வட்டுக்கோட்டை - தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வின்போது சம்பிரதாயபூர்வ செயற்பாடுகள், வழிபாடுகள், பேராயர்களின் உரைகள், புதிய பேராயரை கௌரவிக்கும் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. அதனையடுத்து புதிய பேராயரை கௌரவிக்கும் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பேராயர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நல்லை ஆதீனம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, தென்னிந்திய திருச்சபை நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை புனரமைக்க கோரிக்கை



(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட தர்கா நகர்ப் பகுதியிலுள்ள முக்கிய வீதிகளையும் வடிகான்களையும் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். ஸஹிரா கல்லூரி வீதியின் ஒரு பகுதி, ஜீலானி வீதி, லோட்டஸ் வீதி, இஸ்னாபுள்ள வீதி, சேக் மதார் வீதி, ஸாவியா வீதி, சென்ரல் வீதி உட்பட பல வீதிகள் சேதமுற்று குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

மழை காலங்களில் இவ்வீதிகளின் ஊடாக பயணிக்கும் பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரிங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

வடிகான்களில் அசுத்த நீர் தேங்கி நிற்பதனால் சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மழைநீர் சீராக வடிந்து செல்ல முடியாததால் வீதிகள் நீரில் மூழ்கி விடுவதுண்டு. வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதனால் வாகனங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதோடு விபத்துகளும் இடம்பெறுவதாக பிரதேச வாழ் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

# "சீதாவக்க ஒடிஸி" எனும் பெயரில் ரயில் சேவை

## களனிவெளி மார்க்கத்தில்

'சீதாவக்க ஒடிஸி' எனும் பெயரிலான புதிய ரயில் சேவையொன்றை களனிவெளி மார்க்கத்தில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 02 வாரங்களுக் குள் இந்தப் புதிய ரயில் சேவை முன்னெடுக்கப் படவுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து வக ரயில் நிலையம் வரை பயணிக்கவுள்ள இந்த ரயில், கண் கவரும் இடங்களில் நிறுத்தப்படவுள்ளது.







புது வருடத்தில் தமது பணிகளை ஆரம்பிக்கும் ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்களுக்கு பிரித் பாராயணம் செய்து ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது. 2023 புதிய வருடத்தில் தமது பணிகளை ஆரம்பிக்கும் ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்களுக்கு பிரித் பாராயணம் செய்து ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (03) தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி நிதிய அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது. கங்காராம விகாரையின் நவம் பெரஹெரவுக்காக ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் நிதி உதவிக்கான காசோலையை சாகல ரத்நாயக்க இதன்போது வழங்கினார். அத்தோடு ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டி அந்நிதியத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளன வருடாந்த மாநாடு

## 8ஆம் திகதி பேருவளையில்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன வருடாந்த மாநாடு எதிர்வரும் 8ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு பேருவளை மருதானை அரப் வீதியிலுள்ள முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெறும்.

மாவட்ட சம்மேளனத் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.இக்பால் ஸம்ஸுதீன் (ஜே.பி.) தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் களுத்துறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்.

2023ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்படுவதோடு, களுத்துறை மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் நிலவும் கல்வி, சமூக, தொழில் மற்றும் முக்கிய குறைபாடுகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முக்கியஸ்தர்கள் பலரும் பங்குபற்றவுள்ளதாக மாவட்ட செயலாளர் றிஸ்மி மஹ்றூப் தெரிவித்தார்.

1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டதோடு, இம் மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக 4 தசாப்தங்களுக்கும் மேலாக பாரிய சேவைகளைச் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக சேவையில் மிகவும் ஆர்வமுள்ள இளைஞர்கள் இவ்வமைப்பில் இணைந்து மாவட்ட முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக பங்களிப்புச் செய்யலாம் என செயலாளர் றிஸ்மி மஹ்றூப் மேலும் தெரிவித்தார்.







களுத்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சரத் சந்தனாயக்க ஓய்வுபெற்றுச் செல்வதை முன்னிட்டு பிரியாவிடையளிக்கும் நிகழ்வு களுத்துறை விளையாட்டரங்கில் நடைபெற்றது. அளுத்கமை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த ராஜபக்ஷ தலைமையில் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றதுடன், நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. அதனை களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில பிரேமதாஸ, பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே ஆகியோர் கையளித்தனர். களுத்துறை மாவட்டத்திலுள்ள 30 பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொறுப்பதிகாரிகள் உட்பட பொலிஸ் அதிகாரிகள் நிகழ்வில் பங்குபற்றினர். (பேருவளை பீ.எம்.முக்தார்)

# கிரான் புளிபாய்ந்தகல் பாலத்தை புனரமைக்க விரைவில் நடவடிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கிரான் புளிபாய்ந்தகல் பிரதேசத்தில் சேதமடைந்துள்ள பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கருத்து தெரிவிக்கையில்,

"இப்பாலம் திடீரென்று உடைப்பெடுத்திருப்பது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இது திடீரென்று ஏற்பட்டிருக்கும் அனர்த்தம். எதிர்பாராத அளவில் மிக ஆழமாக அரிப்பெடுத்து, பெரிய கிடங்குகளை ஏற்படுத்தியுள்ளது. இதனை தற்காலிகமாக புனரமைப்பதென்றால் கூட சேதமடைந்திருப்பவற்றை அகற்றி, கொங்கிரீட் இட்டு, தண்ணீரும் வடிந்தோடக் கூடிய ஒரு கட்டுமானத்தைச் செய்யவேண்டும். இந்த மாதம் இறுதியில்தான் இதனைப் பூர்த்திசெய்ய முடியும். இதற்கு கிட்டத்தட்ட 20 மில்லியன் ரூபா அளவிலான நிதி தேவைப்படுகிறது.

இதில் ஒரு நடைமுறைச் சிக்கல் உள்ளது. இந்த வீதி மாகாண சபை அதிகாரத்திற்குட்பட்ட வீதியாகும். மாகாண சபையிடம் அதற்கான பணம் இல்லை என்ற அடிப்படையில் அதனை அமைச்சின் நிதியிலிருந்து செய்வதற்கான வேண்டுகோளை தமக்கு விடுக்குமாறு குறிப்பிட்டார். மேலும் அப்பகுதி விவசாயிகளும், மக்களும் மிக மோசமான நிலையை எதிர்நோக்கியிருக்கிறார்கள்" - என்றார்.

இதுதவிர, அப்பகுதியில் தண்ணீரின் வேகம் குறைவடைந்ததும் ஜனவரி மாதம் முடிவதற்குள் அந்தப் பாதையால் போக்குவரத்துச் செய்ய முடியும் எனத் தான் நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# தொழிலற்றிருக்கும் யுவதிகளுக்கு நற்பிட்டிமுனையில் தையல்பயிற்சி



(நற்பிட்டிமுனை நிருபர்)

தொழிலற்றிருக்கும் யுவதிகளுக்கு நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு எல்லையிலுள்ள தையல்பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தித் திணைககளத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையத்தில் 50இற்கும் மேற்பட்ட யுவதிகள் பயிற்சியைப் பெறுகின்றனர்.

ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிநெறி 2023 டிசம்பரில் முடிவடையவுள்ளதாக போதனாசிரியை திருமதி பரராசசிங்கம் தெரிவித்தார்.

பயிற்சியின் பின் அரச தொழிலை நம்பியிராது சொந்தக்காலில் நின்றுழைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# தம்பலகாமத்தில் தையல் பயிற்சி மாணவர்களின் உற்பத்திக் கண்காட்சி



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக இடம்பெற்றுவரும் தையல் பயிற்சி பாடநெறியை பூர்த்திசெய்த மாணவர்களின் உற்பத்திக் கண்காட்சி நிகழ்வு நேற்று (04) இடம்பெற்றது.

குறித்த கண்காட்சியின் அங்குரார்ப்பண வைபவமானது புதுக்குடியிருப்பு கிராம சேவகர் கட்டடத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் 18 வகையான தையல் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், 2022ஆம் ஆண்டில் தையல் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களின் சுயதொழில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வாறான கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியில் சிறுவர் ஆடை உற்பத்திகள், கட்டில் விரிப்பனைகள், தலையணை உறை, சிறு பைகள்,கால் துடைப்பான் என பல உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதன்போது உரையாற்றிய தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி,

இவ்வாறான உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் ஊடாக நாம் அதனை வெளியுலகுக்கு கொண்டுசென்று தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சிறந்ததொரு உற்பத்தியாளர்களாக மாறவேண்டும் - என்றார்.



குறித்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கிராமிய அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.பத்மராஜா, சமூகசேவை உத்தியோகத்தர் ப.சுதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.பர்ஹானா, சிரேஷ்ட தையல் போதனாசிரியர் ஆர்.சர்வேஸ்வரி ஓய்வுபெற்ற சிரேஷ்ட தையல் போதனாசிரியர் எம்.கே.எல்.லீமா ரோசலின் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கில் முதலாவது வேதாகம பாடசாலை ஆரம்பித்துவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கில் முதலாவது வேதாகம பாடசாலை ஒன்று கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தினால் உத்தியோகபூர்வமாக நேற்று புதன்கிழமை (04) மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் களுவாஞ்சிக்குடி கிளைத்தலைவர் அங்குச சர்மா குருக்கள் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட ஆரம்ப நிகழ்வில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்கள், உள்ளிட்ட பல சிரேஷ்ட குருமார்கள், சிவாச்சாரியார்கள், கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தனர்.

ஆரம்பத்தில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாருக்கு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மாணாக்கர்களுக்கு பிரதம குருமார்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்களால் வேதாகம பாடசாலை ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட இரு குருமாருக்கான நியமனக் கடிதங்களை வழங்கி னார்.

பின்னர் இதன்போது நியமனம் பெற்ற இரு குருமார் உத்தியோகபூர்வமாக வேதாகமக் கல்வியை இதன்போது ஆரம்பித்து வைத்தனர். இப்பாடசாலை தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் என இதன்போது அறிவிப்பட்டது.

கிழக்கிலங்கையில் தாம் பல்வேறு வேலைத் திட்டங்களைச் செய்து வருவதாகவும். கிழக்கில் இந்து சமய நெறிமுறைகளை சீரமைத்து கட்டுக்கோப்புக்குள் கொண்டுவருவதற்காகவும், இளம் குருமாரை முறையாகப் பயிற்றுவிப்பற்காகவும் கிழக்கில் இந்த முதலாவது வேதாகம பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன்போது கலந்துகொண்ட பிரதம குருமார் தெரிவித்தனர்.

## சமாதான நீதவான்களாக மட்டக்களப்பில் மூவர் நியமனம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் மூவர் சமாதான நீதவான்களாக மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (03) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவர்களில் மாணிக்கவாசகம் லிசோத்மன் மற்றும் உருத்திரமூர்த்தி யுவநாதன் ஆகியோர் தீவு முழுவதற்குமான சமாதான நீதவான்களாகவும் சிவசம்பு சசிவரதன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சமாதான நீதவானாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் இதன்போது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறப்பு






இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற் கேற்ப நாம் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளவும், அதேபோன்று தகவல்களையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமுள்ள தாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) குறித்த அமைச்சின் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற் படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கலாம் - என்றார்.

இந்நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ்.சட்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## போடியார் புலம்பல்!



**உள்ளூராட்சி எலக்சன வைக்கச்சொல்லி கொஞ்சப்பேர், வைக்கவேணாம் எண்டு கொஞ்சப்பேர் உயர் நீதிமன்றத்தில வழக்குப் போட்டிருக்காங்க எலுவா..? போற போக்கப் பாத்தா நாட்ட முழுசா உச்ச நீதிமன்றத்தில ஒப்படைச்சுப்போட்டு பேசாம படுத்தா நாடு உருப்படும் போல.**

**ஆட்சி நடத்திற கோதாரிகளுக்கு முடிவெடுக்க ஏலாட்டி மறுகா இஞ்ச 225 பேருக்கு என்னத்துக்கு..?**

# மட்டு. கல்வி வலய டொப் 10 தரப்படுத்தலில் வாழைச்சேனை ஆயிஷா பாலிகா முதலிடம்



(மீராவோடை நிருபர்;)

கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தெரிவித்தார்.

அந்தவகையில், கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்ட டொப் 10 தரப்படுத்தலின்போது, முதலிடம் பெற்ற ஆயிஷா வித்தியாலயத்திற்கு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தால் கடந்த சனிக்கிழமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கும், பிரதேசத் துக்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த மாணவிகள், கற்பித்த ஆசிரியர்கள், தனது சேவைக்காலத்தில் வழிகாட்டிய ஓய்வுபெற்ற அதிபர் எம்.ரீ.எம்.பரீட் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

# வாழைச்சேனையில் பட்டப்பகலில் வீடு புகுந்த திருடன் கைவரிசை!

### 45 பவுண் நகை - இரண்டு இலட்சம் ரூபா பணம் திருட்டு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஓட்டமாவடி முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நகைகளும், பணமும் திருடப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் (3) காலை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர் தொழில்புரியும் கணவன், மனைவி இருவரும் பாடசாலைகளுக்குச் சென்ற நேரத்தைப் பயன்படுத்தி இத்திருட்டுச் சம்பவத்தை செய்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

பட்டப்பகலில் வீட்டின் கூரை வழியாக உட்புகுந்த திருடன் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 45 பவுண்களுக்கு மேலான நகைகளையும், இரண்டு இலட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளான்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி திருமலையில் ஒருவர் பலி




(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான ரயில் கடவைக்கு முன்பாக ரயிலில் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - திருவோணமலை பிரதான ரயில் போக்குவரத்து தண்டவாளத்திலேயே நேற்று (04) அதிகாலை குறித்த நபர் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் தலைப்பகுதி முற்றாக சேதமடைந்துள்ள நிலையில், சடலம் திருகோணமலை தள வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு ரயிலில் மோதி உயிரிழந்த நபர் தொடர்பில் இதுவரை எந்தவொரு தகவலும் தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸலிார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் ஹெரோயினுடன் ஒருவர் கைது



(கந்தளாய் நிருபர்)

கொழும்பிலிருந்து திருகோணமலை பகுதிக்கு 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கொண்டுசென்ற ஒருவரை கந்தளாயில் வைத்து நேற்று (4) கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பத்து கிராம் ஹெரோயின் போதைப் பொருளை 100 பக்கெற்றுகளில் இட்டு மலவாயில் ஊடாக மறைத்து கொண்டு சென்றபோதே கந்தளாய் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பிலிருந்து திருகோண மலைக்கு பயணிகள் பஸ்ஸொன்றில் போதைப் பொருளைக் கொண்டுசென்றபோதே கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


கந்தளாய் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரை கைதுசெய்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய ஹெரோயின் போதைப்பொருள் தொகை இதுவாகும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்துவைத்து விசாரணை களை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மட்டு. புகையிரதத்தில் மோதி வாழைச்சேனை நபர் உயிரிழப்பு




(கல்குடா நிருபர்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த புலத்சிட்டி புகையிரதத்தில் நேற்று முன்தினம் இரவு (03) செவ்வாய்க்கிழமை மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நோக்கி பயணித்த புலத்சிட்டி புகையிரதத்தில் புனானை புகையிரத நிலையத்திற்கும் வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கும் இடையில் ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் (193 மைல் கல்) நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முகம்மதியா வீதி செம்மண்ணோடை வாழைச்சேனை எனும் விலாசத்தில் வசிக்கும் செய்னுலாப்தீன் இக்பால் கலால்தீன் (வயது – 39) என்பவரே உயிரிழந்துள்ளதாக அவரது அடையாள அட்டையை வைத்து அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முஸ்லிம்களின் பாரம்பரிய கலைகளை பாதுகாப்போர் கௌரவிப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

முஸ்லிம்களின் பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்துவரும் சாய்ந்தமருது முஹம்மதிய்யா கலைமன்ற இளம் கலைஞர்களிலிருந்து கலிகம்பு, சிலம்பம், றபான் போன்ற கலைகளை சிறப்பாக முன்னெடுத்துவரும் கலைஞர்களைப் பாராட்டி அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கலிகம்பு அரங்கேற்றமும் சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய மண்டபத்தில் முஹம்மதிய்யா கலைமன்றத் தலைவர் கலைஞர் ஏ.எல்.அலாவுதீனின் நெறிப்படுத்தலில் லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் நேற்று முன்தினம் (03) மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டீ.எம்.றிம்ஸான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும், சாய்ந்தமருது பிரதேச கலாசார உத்தியோகத்தர் ஏ.எச்.சபிக்கா, எஸ்.சுரேஷ், காரைதீவு பிரதேச கலாசார உத்தியோகத்தர், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவை பணிப்பாளர், யூ.எல்.என்.ஹுதா உமர், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், தொழிலதிபர் யூ.எல்.நயீம் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.


இலங்கையின் எதிர்கால கலை, இலக்கிய செயற்பாடுகள், விருதுகளை விண்ணப்பித்துப் பெறுவது, கலைஞர்களுக்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவம் போன்ற விடயங்களை அதிதிகள் தமதுரையில் வலியுறுத்திப் பேசினர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது முஹம்மதிய்யா கலைமன்ற சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கலைஞர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு நிர்வாக சேவை அதிகாரிகளால் பிரியாவிடை







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக அரசாங்க அதிபரின் பிரிவுபசார நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபராக 31.12.2022 வரை மக்களுக்கு மகத்தான சேவையை இன்முகத்துடன் ஆற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் சேவை நலன் பாராட்டு மற்றும் பிரிவுபசார நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவருபரஞ்சினி முகுந்தன், 14 பிரதேச செயலாளர்களும், உதவிப் பிரதேச செயலாளர்களும் ஏனைய திணைக்களங்களில் பதவிநிலை கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

# உச்சத்தைத் தொடும் கொரோனா தொற்று

## உண்மை நிலைவரத்தை வெளியிடுக!

### சீனாவுக்கு WHO வேண்டுகோள்



கொரோனா பாதிப்பு குறித்த உண்மை நிலைவரங்களை வெளியிடுமாறு சீன அரசை உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையே சீனாவின் ஷாங்காய் நகரிலுள்ள மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள மூத்த டொக்டர் தெரிவித்துள்ளார். இதன்படி பார்க்கும்போது ஷாங்காய் நகரில் மட்டும் 2.50 கோடி பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

பீஜிங், தியான்ஜின், சோங்கிங், குவாங்சூ நகரங்களிலும் தொற்று பாதிப்பு உச்சத்திலுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இலவச கொரோனா மருந்து**

சீனாவுக்கு இலவச கொரோனா மருந்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் சம்மதம் தெரிவித்துள்ளது.

சீனாவில் தற்போது உருமாற்றமடைந்த பிஎவ்7 வகை கொரோனா தொற்றால் இலட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தொற்றின் வேகம் அதிகரித்து வருவதால், பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் சீனாவிலிருந்து வரும் சர்வதேச பயணிகளுக்கு அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. சீனப் பயணிகள் அனைவருக்கும் ஆர்டிபிசிஆர் சோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய வகை கொரோனாவை கட்டுப்படுத்தத் தேவையான கொரோனா தடுப்பூசிகளை இலவசமாக வழங்கவும், சீனாவுக்குத் தேவையான உதவிகளை செய்யவும் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

# போதையில் பியர் கறக்கும் பசுக்கள்



கர்நாடக மாநிலம் ராய்ச்சூர் சிந்தனூர் தாலுகா பகுதியிலுள்ள பசுக்கள் வித்தியாசமான முறையில் பால் கறக்கின்றன. இந்தப் பால் இலேசான மஞ்சள் வண்ணத்துடன் பியர் வாசனை கலந்த நுரையுடன் உள்ளது.

பியர் தயாரிப்பு தொழிற்சாலையில் மீதமான சக்கை போன்ற பொருட்களை பசுக்களுக்கு தீவனமாக கொடுப்பதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பியர் தயாரிப்பு தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் சக்கைகளை சாப்பிடும் பசுக்களும் அதே வண்ணத்தில் அதே சுவையில் பால் கறக்கின்றன. மேலும் நாளொன்றுக்கு 3 - 4 லீற்றர் வரை பால் அதிகமாக கறக்கிறது. பியர் சக்கைகளை கொடுக்காவிட்டால் பசுக்கள் நான்கு நாட்களானாலும், பால் கறப்பதில்லையாம்.

பால் கொள்முதல் செய்வோரும் பசுக்களுக்கு இதைக் கொடுக்குமாறு வலியுறுத்துகின்றனர். இதை சாப்பிடும் பசுக்களுக்கு கால் வலி போன்ற பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுகின்றன. இந்தப் பசுக்களின் பால் குடிக்கும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு எந்த மாதிரியான தொந்தரவு வரவுள்ளது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# வேகமாகப் பரவும் பறவைக் காய்ச்சல்



### ஜப்பானில் 77 இலட்சம் கோழிகள் அழிப்பு

ஜப்பானில் பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதால் அங்குள்ள 54 மாகாணங்களில் 77.5 இலட்சம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளன.

ஃபுகுவோகாவிலுள்ள ஒரு ஈமு பண்ணையில் பறவைக் காய்ச்சல் பரவியதால் சுமார் 430 பறவைகள் அழிக்கப்பட்டன. இதற்கிடையில் சிபாவிலுள்ள கோழிப் பண்ணையில் பறவைக் காய்ச்சல் காரணமாக சுமார் 10 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டன. இதன்படி ஜப்பானின் 54 மாகாணங்களில் மொத்தம் இதுவரை 77.5 இலட்சத்துக்கும் அதிகமான கோழிகளிடம் இந்தப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில், மற்ற கோழிகளுக்கு பரவாமல் இருக்க அவை கொல்லப்பட்டன.

**டென்மார்க்கிலும் பாதிப்பு**

மேற்கு டென்மார்க்கிலுள்ள ஒரு பண்ணையில் பறவைக் காய்ச்சல் பரவியதைத் தொடர்ந்து 50 ஆயிரம் கோழிகள் அழிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கோபன்ஹேஜனிலுள்ள கோழிப் பண்ணையில் எச்5என்1 பறவைக் காய்ச்சலால் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக தொற்று மேலும் பரவாமல் தடுக்க 50 ஆயிரம் கோழிகளை அழிக்கவுள்ளதாக டேனிஷ் கால்நடை மற்றும் உணவு நிர்வாகத்தின் லோட்டே பிரிங்க் கூறினார்.

# ஈரான் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம்: சிறுவர்கள் இருவருக்கு மரணதண்டனை



ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட இரண்டு சிறுவர்களுக்கு மரண தண்டனை விதித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

'கடவுளுக்கு எதிரான போர்' என்ற குற்றச்சாட்டில் பெயர்கள் குறிப்பிடப்படாத 18 வயதை பூர்த்தியடையாத சிறுவர்கள் இருவருக்கு விசாரணையின் முடிவில் ஈரான் அரசு தூக்குத்தண்டனை விதித்துள்ளதாக ஈரானின் நீதித் துறை இணையப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, 23 வயதுடைய இரண்டு இளைஞர்களுக்கு 2022ஆம் ஆண்டின் இறுதியில் தூக்குத்தண்டனை நிறைவேற்றியிருந்தது ஈரான். மேலும், ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற 100 பேருக்கு ஈரான், தூக்குத்தண்டனை அறிவிக்கப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்கு ஈரான் இதுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இதற்கிடையில், தங்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைக்கு எதிராக போராட்டக்காரர்கள் சிலர் மனுக்கள் தாக்கல்செய்து வருகின்றனர். அவற்றில் சிலரின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மறு விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுவருகின்றது.

மாஷா அமினி என்ற இளம்பெண்ணின் மரணத்தைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. மூன்று மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தப் போராட்டத்தில் 300இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், 15,000 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஈரான் தூக்குத்தண்டனை அறிவித்தது. ஆனால், இவற்றின் அதிகாரப்பூர்வ எண்ணிக்கை இதுவரை தெரியவில்லை. மேலும், போராட்டக்காரர்களில் 400 பேருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல் இருபதுக்கு 20 ஆட்டத்தில் போராடித் தோற்ற இலங்கை

### இரண்டாவது போட்டி இன்று புனேயில்



ஹார்டிக் பாண்டியா தலைமையிலான இந்திய அணிக்கும், தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி போராடி 2 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிய நிலையில், இரண்டாவது ஆட்டம் இன்று புனேயில் நடைபெறுகிறது.

நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் இறுதியில், தீபக் ஹூடா மற்றும் அக்சர் பட்டேல் ஆகியோரின் இணைப்பாட்டத்துடன் 20 ஓவர் முடிவில் 162 ஓட்டங்கள் எடுத்தது.

163 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் ஆடிய இலங்கை அணி முக்கிய கட்டத்தில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. அபாரமாக விளையாடிய அணித்தலைவர் சானக்க 27 பந்துகளில் 45 ஓட்டங்கள் சேர்த்தார். வெற்றிக்கு கடைசி 2 ஓவர்களில் 29 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

19ஆவது ஓவரில் நோ போல், சிக்சர் என ஓட்டங்கள் செல்ல, கடைசி ஓவரில் இலங்கையின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இதில் அக்சர் பட்டேல் வீசிய 3ஆவது பந்தில் சாமிக்க கருணரத்ன சிக்சர் அடிக்க, ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. கடைசி பந்தில் வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவைப்பட, கருணாரத்னவால் அடிக்க முடியவில்லை. இதன் காரணமாக 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா த்ரில் வெற்றிபெற்றது.

# மும்பைக்கு மாற்றப்படும் கிரிக்கெட் வீரர் பண்ட்



விபத்தால் காலில் ஏற்பட்ட காயத்துக்குச் சிகிச்சை பெறுவதற்காக இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பண்ட் மும்பையிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்படுகிறார்.

ரிஷப் பண்ட் கடந்த வியாழக்கிழமை அதிகாலை டில்லியிலிருந்து காரில் சென்றார். அம்மாநிலத்தின் மங்லௌர் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்த கார் மோதி விபத்துக்குள்ளானதில் ரிஷப் பண்ட் படுகாயமடைந்தார். பின்னர் மீட்கப்பட்டு அவருக்கு நெற்றிப் பகுதியில் ஏற்பட்ட வெட்டுக்காயத்துக்காக பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ரிஷப் பண்டின் தலை, முதுகு, காலில் காயங்கள் ஏற்பட்டன. விபத்துக்குள்ளான கார் முழுமையாகத் தீப்பிடித்து உருக்குலைந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த ரிஷப் பண்ட் தற்போது தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

படுகாயங்களுடன் தப்பியுள்ள ரிஷப் பண்டுக்கு மருத்துவ சிகிச்சையும், ஓய்வும் தேவை என்பதால் இந்தாண்டின் முதல் பாதியில் அவர் மீண்டும் விளையாட வாய்ப்புகள் மிகக் குறைவு எனப்படுகிறது.

இந்நிலையில் காலில் ஏற்பட்ட காயத்துக்கு மும்பையில் சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார். இத்தகவலை டில்லி கிரிக்கெட் சங்கத்தின் இயக்குநர் ஷ்யாம் சர்மா தெரிவித்துள்ளார். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட அனைத்து பரிசோதனைகளும் மும்பை வைத்தியசாலையில் நடத்தப்படும்.



**லீமென் ஹென்லூம், ஏறாவூர் முன்னாள் நகரபிதா அல்ஹாஜ் நளீம் ஹாஜியார் மற்றும் செல்லம் பிரிமியர் டிலான் அனுசரணை யில் ஏறாவூர் பெட்மின்டன் கழகத்தால் நடத்தப்பட்ட 9 அணிகள் பங்குபற்றிய லீக் முறையிலான பெட்மின்டன் சுற்றுப்போட்டியில் காத்தான்குடி பெட்மின்டன் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.**

*(படம் - நிந்தவூர் நிருபர்)*

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# கட்டார் ஒருங்கிணைந்த தமிழர் பேரவை நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனான றோயல் கட்டார்





**(நூருல் ஹுதா உமர்)**

கட்டார் ஒருங்கிணைந்த தமிழர் பேரவை நடத்திய 2022ஆம் ஆண்டுக்கான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் கட்டார் எம்.ஐ.சி. கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் விக்டோரியா கிரிக்கெட் அணியை எதிர்த்து றோயல் கட்டார் அணி மோதியது.

முதலில் துடுப்பாடிய விக்டோரியா அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 106 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பாடிய றோயல் கட்டார் அணி, 9.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்று வெற்றிவாகை சூடியது.

வெற்றிவாகை சூடிய அணிக்கு கட்டாரிலுள்ள இந்திய சமூக நல மன்றத்தின் தற்காலிகத் தலைவர் வினோத் நாயர் பரிசுகள் மற்றும் கிண்ணங்களை வழங்கினார்.

மேலும் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு பரிசுகள் மற்றும் கிண்ணங்கள் அதிதிகளால் வழங்கப்பட்டன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7